விலை: 30.00
பக்கங்கள் :இருபத்து நான்கு + II
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-6831)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 20 வெள்ளிக்கிழமை (05.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

**தரம் 5**
புலமைப்பரிசில் பரீட்சை
மேல்மாகாண மாதிரி வினாத்தாள்
உள்ளே...
புதன், வெள்ளி தொடர்ந்து வெளிவரும்

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை ஆரம்பிக்க

## கூட்டமைப்பே தடை - ஆளுநர் சுரேன் ராகவன்

*(யாழ்ப்பாணம்)*

***யாழ் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து ஆலையை மீள இயக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே தடையாக உள்ளதாக வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.***

நேற்றையதினம் மாலை யாழ் பொது நூலகத்தில் இடம்பெற்ற வட்டமேசைக் கலந்துரையாடலில் பங்குபெற்றிய சிவில் அமைப்புப் பிரதிநிதி ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதி லளித்தார். குறித்த வட்ட மேசைக் கலந் துரையாடலில் பல்துறைசார் நிபுணத்துவம் மிக்கவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந் நிழ்வில் சிவில் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் ஆளுநரிடம் வட மாகா ணம் இன்றைய சூழ்நிலையில் பொருளாதார ரீதியில் பாரிய சுமை களைத் தாங்கிய வண்ணம் காணப் படுகின்றது வட மாகா ▶23

## வவுனியாவில் நில நடுக்கம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம், பத் தினியார்மகிழங்குளம் பகுதியில் நேற்று காலை நில நடுக்க அதிர்வு களை அப்பகுதி மக்கள் உணர்ந் துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தாண்டிக்குளம், பத்தினியார் மகிழங்குளம் பகுதியைச்சுற்றிய சில வீடுகளில் நில நடுக்க ▶23

## ஜேர்மன் நாட்டு தூதுவருடன் ஆளுநர் ராகவன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் நாட்டின் தூதுவர் ஜோன் ரொட் வட மாகாண ஆளு நர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று பிற்பகல் ஆளுநர் செய லகத்தில் சந்தித்தார். 29 வருடங் களுக்கு பின்னர் தமது இடத்தினை பார்வையிட காங்கேசன்துறை, கீரிமலை மக்கள் நேற்று விஜயம் செய்ததனை நினைவுகூர்ந்த ஆளுநர், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் தலைமையில் பொது மக்களுடைய காணிகளை அவர்களிடமே விடுவிக் ▶23

## கிளிநொச்சி இத்தாவில் பகுதியில் லொறி - டிப்பர் கோரவிபத்து

### இருவாகன சாரதிகளும் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி - இத்தாவில் பகுதியில் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். யாழ்ப் பாணம் நோக்கி பயணித்த லொறி ▶23



## வலி.வடக்கில் பொதுமக்களின் காணிகளை இனங்காணும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலிகாமம் வடக்கு காங் கேசன்துறை பிரதேசத்தில் அமைந் துள்ள ஜனாதிபதி மாளிகையினை சூழவுள்ள பொதுமக்களின் 62 ஏக்கர் தனியார் காணிகளை விடு விக்கும் நடவடிக்கையின் ஆரம்ப கட்டமான காணிகளை இனங் காணும் நடவடிக்கை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பங்கு பற்றலுடன் நேற்று ஆரம்பமானது.

இந்த 62 ஏக்கர் காணிகளை நான்கு வலயங்களாக பிரித்து, அவற்றினை அளந்து ▶23

## காற்றின் வேகம் வடக்கில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோண மலை, அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங் களிலும் மணித்தியாலத்திற்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் மழைபெய்யக்கூடும் என கால நிலை அவதான நிலையம் அறி வித்துள்ளது. ▶24

## பாடசாலைக்குள் அத்து மீறி நுழைய முயன்றவர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

### காலி அக்மீமன பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

காலி மாவட்டம் அக்மீமன பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றினுள் அத்துமீறி நுழைந்த வர் இராணுவத்தால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 39 வயதான நபர் ஒருவரே இவ் வாறு உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. ▶23

## போதைப்பொருள் குற்றவாளியான ஷியாம் மற்றும் அவரது மனைவிக்கு தூக்கை உறுதி செய்த நீதிமன்றம்

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றவாளி முகமது ஷியாம் மற்றும் அவரது மனைவிக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த 2003 ஆண்டு கொழும் பின் வார்ட் பிளேஸில் உள்ள ஒரு வீட்டில் 23 கிலோகிராம் ஹெரோ யின் வைத்திருந்தமை தொடர்பாக முகமது ஷியாம் மற்றும் ▶23

### சட்டவிரோதமான கைது தொடர்பாக

## மனித உரிமைகள் ஆணைக்குழ பதில் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம்

(கொழும்பு)

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் களுக்குப் பின்னர் பொலிஸாரால் மேற் கொள்ளப்படும் தன்னிச்சையான மற்றும் சட்டவிரோதமான கைதுகளை தவிர்க்க பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை கோடிட்டுக் காட்டி பதில் பொலிஸ்மா அதி பருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கடிதம் எழுதியுள்ளது. பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன ▶23

### பொலிஸாரின் துப்பாக்கி அபகரிப்பு

## மட்டக்களப்பில் பதற்றம் இராணுவம் குவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, திமிலைதீவு பகுதியில் நேற்று காலை மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற இருவருக்கும் பொலிஸா ▶23

நடுவு நிலை தவறா நன்னெறி கர்க்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாட்கள் தேவை

யாழ்.திருநெல்வேலியில் உள்ள கட்டிடத்துக்கு தச்சு வேலையாளர் மற்றும் அலுமினிய வேலை தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் நாளாந்தம் 1500லிருந்து 2000வரை. மதிய உணவு வழங்கப்படும்

தொடர்பு: 077 953 0496 (C-6870)


# பயங்கரவாத உறுப்பினர் விமான நிலையத்தில் கைது

நுவரெலியாவில் இயங்கிய தேசிய தௌஹீத் ஜமாத் என்ற அமைப்பின் முகாமில் பயிற்சி பெற்ற செயின் அன்சார் மொஹமட் ரினாஸ் என்பவர், நாட்டில் இருந்து தப்பிச் செலல முயற்சித்தபோது விமான நிலையத்தில வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் கைது செய்யப்படுவதற்கு முனனர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அவரது நகர்வுகளை கண்காணிக்கப்பட்டு வந்ததாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மவனெல்லவில் வசிப்பவர் என்றும் அவர் தற்போது கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார். (ம-3)


NSB

## பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31/05/2018ற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 03/08/2019 தொடக்கம் 11/08/2019 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெற உள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | முல்லைத்தீவு | 01/08/2019 | 03/08/2019 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 02 | மல்லாவி | | | |
| 03 | கொடிகாமம் | | | |
| 04 | சாவகச்சேரி | 01/08/2019 | 03/08/2019 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 05 | கிளிநொச்சி | | | |
| 06 | சுன்னாகம் | | | |
| 07 | காரைநகர் | 01/08/2019 | 04/08/2019 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 08 | சங்கானை | | | |
| 09 | மானிப்பாய் | | | |
| 10 | வவுனியா | 01/08/2019 | 04/08/2019 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 11 | நெல்லியடி | | | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 12 | அச்சுவேலி | 08/08/2019 | 10/08/2019 | |
| 13 | பருத்தித்துறை | | | |
| 14 | மன்னார் | | | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 15 | வங்காலை | 08/08/2019 | 10/08/2019 | |
| 16 | யாழ்ப்பாணம் | | | |
| 17 | யாழ்ப்பாணம் 2ம் கிளை | | | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |
| 18 | ஊர்காவற்றுறை | 08/08/2019 | 11/08/2019 | |
| 19 | திருநெல்வேலி | | | |
| 20 | கோப்பாய் | | | |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு

வடபிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### விவசாயபீட புதிய சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

மேற்படி சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் பொதுநிருவாகக் கிளையில் 19.07.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா இரண்டாயிரமும் (2000.00). மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐந்நூறும் (500.00) தனித்தனியாகமக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை அறிவியல் நகர் பொது நிருவாகக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில்அனுப்பப்படாதவிண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்கமேல்மூலையில் "விவசாயபீட புதிய சிற்றுண்டிச்சாலைக்கான விண்ணப்பப்படிவம்"எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல்வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகநேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகஅறிவியல் நகரில் அமைந்துள்ள பொதுநிருவாகக் கிளையிலிருந்துபெற்றுக்கொள்ளமுடியும். அலுவலகதொலைபேசி இலக்கம்: 021-2060180.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**04.07.2019**


## உங்கள் மோட்டார் சைக்கிள் கனவை நனவாக்க

# TRADE FINANCE

நிறுவனத்திடம் இருந்து ஓர் அரியவாய்ப்பு

5ம் 6ம் திகதிகளில்



2 மணிநேர கனவு லீசிங்

Bike Promo ✕ Change



- குறைந்த கட்டணங்களுடன் லீசிங் வசதிகள்
- விசேட விலைக்கழிவுகள்
- தலைக்கவசம் இலவசம்




**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் முன்பாக**

உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய மோட்டார் சைக்கிள்
(Bajaj, TVS, Yamaha, Hero Honda & Suzuki)

**TRADE FINANCE INVESTMENTS PLC**

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9997, 222 1898

தொடர்புகளுக்கு:
கோபி 0770062594, Aravinth 0770674427,
Kokulan 0769778113, Sathees 0778447777


# 45ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம்: 22.10.1936 — மறைவு 23.05.2019

கடந்த 23.05.2019 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் கதிர்காமமுதலி தங்கவேல்

**(ஓய்வுபெற்ற காசாளர் - மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்)**

எங்கள் இதய தீபத்தின் மறைவுச் செய்தி கேட்டவுடன் விரைந்து வந்து எமது துயரில் பங்கேற்ற உதவி செய்த அன்பு உள்ளங்களுக்கும் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம்.

நாளை (06.07.2019) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையாரின் இழப்பின்போது நாம் உணர்வுகளுக்கு அடிமையாயிருந்த தருணத்தில் எமது ஞாபகத்துக்கு அப்பாற்பட்ட நிலையில் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பு வழங்கத் தவறியிருப்பின் பெருமனதோடு இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். (C-6867)

கந்த உடையார் வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

# அதிகாரப்பகிர்வினூடாகவே தேசிய ஒற்றுமை உருவாகும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டின் முன்னேற்றத்துக்கு தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். அதிகாரப் பகிர்வொன்றினூடாகவே தேசிய ஒற்றுமையை உருவாக்க முடியும் என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

கண்டி, பதி உதின் மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் தமது அதிகாரப் போராட்டத்துக்காக இனங்களுக்கு இடையில் இருந்த ஒற்றுமையை சீர்குலைத்து விட்டனர். அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போதே மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருக்குமாக இருந்தால் தற்போதுள்ள பிரச்சினைகள் நாட்டில் ஏற்பட்டிருக்காது.

நாட்டின் முன்னேற்றத்துக்கு தேசிய ஒற்றுமை அவசியமானதாகும். சகலரும் இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். அனைவரும் நாட்டின் ஒற்றுமை பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

16 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளிலேயே முஸ்லிம் இனத்தவர்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்காக புத்தளம், பேருவல போன்ற பகுதிகளில் குடியேறினர். அன்று அவர்களுக்கு எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை. வரலாற்றில் சிறுபான்மையினருக்காக முன்னுரிமை முறையாக வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

---

## படுகொலை சம்பவங்களின் பின்னால் மாகந்துரே மதூஷ்

பிரபல பாதாள உலக குழுத் தலைவனின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட மிகப் பெரிய படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக. கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி மாகந்துரே மதூஷினால் நடத்தப்பட்ட 4 பாரிய கொலைச் சம்பவங்கள் தொடர்பிலான தொலைபேசி உரையாடல்கள் தொடர்பாகவும் தகவல் திரட்டப்பட்டுக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணை நடத்தி வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை நீர்கொழும்பு கிம்புலாபிட்டிய வீதியின் தலுபொத்த எல பகுதியில் பாதாள உலகக் குழு தலைவரான மாகந்துரே மதூஷ் பதுக்கி வைத்திருந்த ரி- 56 ரக துப்பாக்கி கடந்த வாரம் கைப்பற்றப்பட்டது.

கொலைகள் உட்பட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக மாகந்துரே மதூஷ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-9)

---

## முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள்
### நிறுத்தப்பட வேண்டும்-மனித உரிமை கண்காணிப்பகம்

முஸ்லிம்களுக்கு எதிரான தன்னிச்சையான கைதுகள் மற்றும் பிற முறைகேடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் காணப்படும் அதே வேளை பிரஜைகளை பாதுகாக்க வேண்டிய தேவையும் அரசாங்கத்துக்குள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசியாவிற்கான இயக்குநர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு, இலங்கை அதிகாரிகள் துரிதமாக முடிவை காணவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களின் பின்னர் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை பாதுகாப்பு அதிகாரிகள், கண்மூடித்தனமாக கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ்தடுத்துவைத்துள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையிலேயே பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மேலும், தேடுதல் நடவடிக்கையின் போது அல்- குரானை வைத்திருந்தமைக்காகவும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து பிரஜைகளினதும், அடிப்படை உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் உடனடியாகவும் பக்கச் சார்பற்ற விதத்திலும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அந்தவகையில், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் ஊடாகவே, மனித உரிமை துஷ்பிரயோகங்களை முடிவிற்கு கொண்டு வர முடியும் என்றும் மேலும் தெரிவித்தார். (7-9)

---

## தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு பாதுகாப்பு வழங்குவதால் தமது பகுதிகளுக்கே பாதுகாப்புடன் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்-பேராசிரியர் திஸ்ஸவிதாரண

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர் பகுதிகளுக்கு விசேட அதிரடிப் படையின் பாதுகாப்புடன் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தான் அமைச்சராக இருந்த காலப்பகுதிகளில் கூட பாதுகாப்புடன் தமிழர் பகுதிகளுக்கு சென்றதில்லை என முன்னாள் விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனக்கூறும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் பகுதிகளுக்குக் கூட விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு அரனுடன் செல்லும் துர்ப்பாக்கிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினைகளை தமது அரசியல் சுய லாபத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் அடகு வைத்துவிட்டு அரச சுக போகங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேச வேண்டிய தலைவரும் தீர்வை முன்வைக்கக் கூடிய தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ரஜபக்ஷவே காணப்படுகிறார்.

ஏனெனில் சிங்கள அடிப்படைவாதக் கொள்கையுடைய மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஆளுமை அவரிடமே காணப்படுவதோடு மூவின மக்களும் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வை அவர் முன்வைப்பார்.

தற்போதைய ரணில் அரசாங்கத்திற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவினால் தமிழ் மக்களுக்குக் கிடைத்தது சமுர்த்தியும் கம்பெரலியவும் மட்டும்தான்.



ஆகவேதான் தமிழ் மக்களின் கொள்கையுடன் செயற்படாது அரசாங்கத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதன் விளைவே தமிழர் பகுதிகளுக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் விசேட அதிரடிப்படை பாதுகாப்புடன் செல்வதற்கு வழி அமைத்தது என அவர் மேலும் தெரிவித்தார். (9-10)

---

## பதவிக்காலத்தை நீடிக்க ஜனாதிபதி முயற்சி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் அடுத்த வருடம் ஜூலை மாதம் வரை பதவியில் இருக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பதிரண தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றமே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும். ஜனாதிபதி தேர்தலையே ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் எதிர்பார்த்துள்ளோம். ஆனால் சுதந்திர கட்சி ஜனாதிபதி தேர்தலுக்கு ஒருபோதும்தயாரில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

---

## மன்னிப்பு கோரியது பேஸ்புக் நிறுவனம்

உலகம் பெரும்பாலான நாடுகளில் சமூக வலைத்தளங்கள் முடங்கியமை தொடர்பில் பேஸ்புக் நிறுவனம் வருத்தத்தை வெளியிட்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்திற்கு சொந்தமான பேஸ்புக், வட்ஸ்அப், இஸ்ட்ராகிராம் மற்றும் மெசஞ்சர் ஆகிய சமூக வலைத்தளங்களே இவ்வாறு முடங்கியிருந்தன.

பேஸ்புக் நிறுவனத்திடம் உள்ள சிக்கல் தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தங்கள் சமூக வலைத்தளங்கள் முடங்கியமை தொடர்பில் பயனாளர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளது.

நேற்று முன்தினம் இரவில் இருந்து உலகம் முழுவதும் பேஸ்புக், வட்ஸ்அப், இஸ்ட்ராகிராம் மற்றும் மெசஞ்சர் ஆகிய சமூக வலைத்தளங்கள் முடங்கியமை குறிப்பிடத்தக்கது. (7-9)

---

## தேர்தலை இலக்கு வைத்து மலர்ந்தது ஸ்ரீலங்கா நிதாஸ் பொதுஜன பெரமுன

(கொழும்பு)

தேர்தலை இலக்குவைத்து புதிய கூட்டணி ஒன்றினை அமைக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஸ்ரீலங்கா நிதாஸ் பொதுஜன பெரமுன என்ற பெயரில் பொதுவான கூட்டணியை உருவாக்க முடிவு எட்டப்பட்டுள்ளதாக மகிந்த அமரவீர நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பது தொடர்பாக இரு கட்சிகளுக்கு இடையிலும் பலகட்டப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

இருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தவுள்ளதாக தெரிவித்து வருகின்றது.

இதன் காரணமாக கடந்த பேச்சுவார்த்தைகளின்போது எவ்வித முடிவும் எட்டப்படாத நிலையில் தற்போது புதிய கூட்டணியை உருவாக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக அறிவிப்பு வெளியாகவில்லை. ஆனால் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ என்றும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்த மாதம் 11 ஆம் திகதி அறிவிப்போம் என்றும் அக்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)




# மே.தீவுகள் ஆறுதல் வெற்றி

## ஆப்கானிஸ்தான் மீண்டும் ஏமாற்றம்



அரைச்சதமடித்த ஆப்கானின் இக்ரம்

**288 ஓட்டங்கள்**

மே.தீவுகளுக்கு எதிராக 288 ஓட்டங்கள் எடுத்த ஆப்கானிஸ்தான் அணி, உலக கிண்ண அரங்கில் ஒரு இன்னிங்சில் தனது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தது. இதற்கு முன், சமீபத்தில் மான்செஸ்டரில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 247 ஓட்டங்களை எடுத்திருநததே அவ்வணியின் அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது.

உலகக் கிண்ண அரையிறுதி வாய்ப்பை இழந்த மே.தீவுகள் அணி, தனது கடைசி லீக் போட்டியில் 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி கண்டது. ஆப்கானிஸ்தான் அணி ஒரு வெற்றியை கூட பதிவு செய்யாமல் பரிதாபமாக வெளியேறியது.

இங்கிலாந்தில், 12வது ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. லீட்ஸில் நடந்த லீக் போட்டியில் ஏற்கெனவே அரையிறுதி வாய்ப்பை இழந்த மே.தீவுகள் - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மே.தீவுகள் அணியின் தலைவர் ஜேசன் ஹோல்டர், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**கெய்ல் ஏமாற்றம்**

மே.தீவுகள் அணிக்கு கிறிஸ் கெய்ல் (7) ஏமாற்றினார். பின் இணைந்த எவின் லீவிஸ், ஷோய் ஹோப் ஜோடி ஆப்கானிஸ்தான் பந்துவீச்சை எளிதாக சமாளித்து ஓட்டங்கள் சேர்த்தது. குல்பதின் வீசிய 14வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய லீவிஸ், அரைசதம் கடந்தார். ரஷிட் கான் வீசிய 25வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விரட்டினார் ஷோய் ஹோப். இரண்டாவது விக்கெட்டுக்காக 88 ஓட்டங்கள் சேர்த்த போது ரஷிட் கான் 'சுழலில்' லீவிஸ் (58) சிக்கினார். மறுமுனையில் அசத்திய ஹோப், தன்பங்கிற்கு அரைச் சதமடித்தார்.

**ஹோப் நம்பிக்கை**

அடுத்து வந்த ஷிம்ரன் ஹெட்மயர், மொகமட் நபி பந்தில் 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக 65 ஓட்டங்கள் சேர்த்த போது தவ்லத் ஜத்ரன் பந்தில் ஹெட்மயர் (39) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய ஹோப் (77) நம்பிக்கை அளித்தார்.

பின் இணைந்த நிக்கோலஸ் பூரன், அணித் தலைவர் ஹோல்டர் ஜோடி ஆப்கானிஸ்தான் பந்து வீச்சை அடித்து நொருக்கியது. அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்த பூரன், 40 பந்துகளில் அரைசதமடித்தார். இவர், 58 ஓட்ங்கள் எடுத்திருந்த போது 'ரன் அவுட்' ஆனார். அணித் தலைவர் ஹோல்டர் (45 ரன், 4 சிக்சர்) ஓரளவு கைகொடுத்தார். ஷிர்ஜாத் வீசிய கடைசி ஓவரில் கார்லஸ் பிராத்வைட், தொடர்ச்சியாக ஒரு சிக்சர், 2 பவுண்டரி விளாசினார்.

50 ஓவர்கள் நிறைவில், மே.தீவுகள் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களை எடுத்தது. பிராத்வைட் (14) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆப்கானிஸ்தான் சார்பில் தவ்லத் ஜத்ரன், 2 விக்கெட் வீழ்த்தினார்.

**இக்ரம் அரைசதம்**

சவாலான இலக்கை விரட்டிய ஆப்கானிஸ்தான் அணிக்கு அணித் தலைவர் குல்பதின் (5) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய ரஹ்மத் ஷா (62), இக்ரம் அலிகில் (86) ஜோடி அரைச்சதம் கடந்து நம்பிக்கை அளித்தது. நஜிபுல்லா ஜத்ரன் (31) 'ரன்-அவுட்' ஆனார். கீமர் ரோச் 'வேகத்தில்' மொஹமட் நபி (2), சமியுல்லா ஷின் வாரி (6) வெளியேறினர். ஆஸ்கர் ஆப்கன் (40) ஆறுதல் அளித்தார். கார்லஸ் பிராத்வைட் பந்தில் தவ்லத் ஜத்ரன் (1), ரஷிட் கான் (9) ஆட்டமிழந்தனர். கடைசி நேரத்தில் 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்த சையது ஷிர்ஜாத் (25), தோமஸ் பந்தில் ஆட்டமிழந்தார்.

50 ஓவர்களில் ஆப்கானிஸ்தான் அணி 288 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. முஜீப் ரஹ்மான் (7) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் மே.தீவுகள் அணி சார்பில் பிராத் வைட் 4, ரோச் 3 விக்கெட்டுக்களை கைப் பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மே.தீவுகள் அணியின் ஷேய் கோப் தெரிவானார்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யூலிஆன் தயாகரன்
அவர்களின் மாமியார்

**திருமதி**
**செ.கிருபைராணி மாணிக்கம்**

அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்ததையிட்டு அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.

(9456)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

மேற்படி விடயம் தொடர்பாக எதிர்வரும் 07.07.2019 ஞாயிறு முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற இருப்பதனால் பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
மு/மல்லாவி மத்திய கல்லூரி

(C-6864)




## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகின்றது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கக் கூடியவரும் இலங்கையில் பலதரப்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றவருமான பேராசிரியர் அருள்நிதி காஞ்சிநாதன் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- ◈ எளியமுறை உடற்பயிற்சிகள்
- ◈ எளியமுறை தியானப்பயிற்சிகள்
- ◈ காயகல்பப் பயிற்சி
- ◈ அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்** : 06.07.2019 சனிக்கிழமை தொடக்கம் 12.07.2019 வெள்ளிக்கிழமை வரை
**நேரம்** : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
**பயிற்சிகளை வழங்குபவர்கள்** : மனவளக்கலை, பேராசிரியர் அருள்நிதி காஞ்சிநாதன், துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 1ம் நிலை 06.07.2019 சனி மற்றும் 07.07.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்,**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல: 021 222 2772**

(C-6866)

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் வல்வெட்டித்துறை தொழில் பயிற்சி நிலையத்தில்

## NVQ மட்டங்களைக் கொண்ட பயிற்சி நெறிகள் ஆரம்பம்.

**2019 இன் இரண்டாம் அரையாண்டுக்கான [01.07.2019 தொடக்கம்] பாடநெறிகள்**

1. பெண்கள் சிறுவர்களிற்கான ஆடைவடிவமைப்பாளர் (Tailoring)
2. தகவல் தொழில்நுட்ப வியலாளர் (ICT)
3. வெளி இணைப்பு இயந்திரம் பழுது பார்த்தல் (Outboard Engine mechanism)
4. வீட்டு மின்னிணைப்பாளர் (Domestic Electrical)

மாணவர்கள் சேர்க்கை பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

சகல பாடநெறிகளும் முற்றிலும் இலவசமே!

மட்டுப்படுத்தப்பட்டளவு மாணவர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். எனவே உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்.

**தகைமை: O/L, A/L**

**இடம் : வல்வை பழைய நகர சபை மண்டப மேல் மாடி [வல்வெட்டித்துறைச்சந்தி]**

1. தொடர்புகளிற்கு: நிலைய பொறுப்பாசிரியை :
021 226 2550, 071 031 8864
2. அனுசரணை வழங்கி வரும் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்க
இணைத்தலைவர் : R.இராஜேந்திரா 077 306 8750.
செயலாளர் : V.P.பாலேந்திரன் 077 822 3632

27.06.2019

"முயற்சியும் பயிற்சியும் உயர்ச்சிக்கு வழி"

8

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**பகிரங்க ஏல விற்பனை**

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியின் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட இரும்பு, மர தளபாடங்கள், இலத்திரனியல் பொருட்கள் 11.07.2019 வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர்05.07.2019 முதல் கடமை நேரத்தில் பாடசாலை வளாகத்தில் பொருட்களினை பார்வையிட முடியும்.

அதிபர் (C-6858)

## சட்ட ஒழுங்கு விதிகளை மீறிய 5,120 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நகர பகுதியில் ஏற்படும் வாகன நெரிசலை கட்டுப்படுத்தவும் , வாகன விபத்துக்களை குறைப்பதற்காகவும் நாடளாவிய ரீதியில் வாகன ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்நிலையில் கொழும்பிற்குள் மாத்திரம் புதிய ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 5 ஆயிரத்து 120 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் இம்மாதம் முதலாம் திகதி வரை 5 ஆயிரத்து 120 வீழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (7)

## நாட்டிலுள்ள 17 மாவட்டங்களில் வரட்சி

### அனர்த்த முகாமைத்துவ நிலையம்


(கொழும்பு)

நாட்டிலுள்ள 17 மாவட்டங்களில் நிலவும் வரட்சியான காலநிலையினால் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 520 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்த குடும்பங்களைச் சேர்ந்த 459267 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 65 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டமாக மட்டக்களப்பு காணப்படுவதாகவும் அனர்த்த மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்வன் ஆனந்தசோதி சஞ்சீவன்

**பிறப்பு: 19.04.1998** **இறப்பு: 16.06.2018**

ஒரே வயிற்றில் பிறந்து உடன் பிறப்பு இல்லாக் குறையை நீக்கினாய்...
அன்பு காட்டி, அரவணைத்து, கொஞ்சும் தமிழ் பேசி உன் அன்பில் நாம் திளைத்திருக்க, காற்றில்
கலந்த வாசமாய், கண்ணில் பட்டு மறைந்த கானல் நீராய், ஆழமான உன் நினைவுகளை எம்முள்
புதைத்து விட்டு கைகளுக்கு எட்டாத தூரம் சென்றதோனோ தம்பி...
ஈர் ஆறு மாதங்கள் உருண்டோடியும் ஆறவில்லையடா எம் மனம் பேதை மனதிற்கு எப்படித்
தெரியும்? எம் இறுதி மூச்சுவரை இத்துயர் ஆறாது என்று...
ஏனடா கடவுளுக்கும் பிடித்த குழந்தையாய் நீ இருந்தாய்? அதனால் தானோ எம்மை வஞ்சித்து
உன்னை தன்னோடு அழைத்துச் சென்று வேடிக்கை பார்க்கின்றான் அவ் வஞ்சகன்...
எப்போதடா நாம் உன் செல்லக்குரல் கேட்டு, உன் குறும்புக்கு நகைக்கப் போகின்றோம் தம்பி...
காலன் எனும் கயவனுக்குத் தெரியுமா எம் பாசம் அதனால் தானோ என்னவோ
கட்டியிழுத்துவிட்டான் அக்கயவன்...
நீ எம்மிடம் வராமலிருந்தாலும் உலக நியதியில் நாம் உன்னிடம் வருவோம்
என்ற நம்பிக்கையில் விடிகின்றது நம் பொழுது...

**05.07.2019 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.**

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு.

குடும்பத்தினர் (9468)

## இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெரியோர் உதவியுண்டு.

**இடபம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்.

**கும்பம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, உங்களைப் பற்றி விமர்சிப்பவர்களிடம் எதிர்த்துப் பேசாமல் செல்வீர்கள்.

**மகரம்:** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சயன சுகக் குறைவான நாள்.

**இராசி பலன்** – கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, சுக், ராகு, புத |
| | இராசி பலன் | | செவ், சந் |
| | கிரகநிலை | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம் திருவோணம்

05.07.2019
ஆனி 20, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திருதியை முன்னிரவு 7.16 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 3.49 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணிவரை
இராகுகாலம் 10.27-11.57 மணிவரை

வளவன்

**தனுசு:** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீகள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# தெங்கு சிறுகைத் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கல்

தென்னைச் சிறு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ரூபாய் 22 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை கொடுப்பனவுகள் வழங்கப்படவுதாக வடமாகாண தெங்குப் பயிர்ச் செய்கை பிராந்திய முகாமையாளர் எஸ்.வைகுந்தன் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட தென்னை சிறுகைத் தொழிலாளர்கள் 30 பேருக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

மேலும் குறித்த பிரதேச செயலகப் பகுதியில் தெரிவு செய்யப்படும் 30 பயனாளிகளுக்கு அவர்களின் தொழிலுக்கு ஏற்ற வகையில் நிதி உதவி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# மஹோற்சவம்

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோவில் மஹோற்சவம் இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10 மணியளவில் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

அல்லாரை அறுகம்புலம் கணபதிப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (5-114)




# 'பசுமை புரட்சி' மரம் நடுகை செயற்றிட்டம்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால், இளவாலை கிராமத்தில் வாழ்ந்து மருத்துவராக சேவையாற்றி மறைந்த அமரர் வைத்திய கலாநிதி செ.து.சண்முகராஜாவின் ஞாபகார்த்தமாக, அவரது மகனின் நிதிபங்களிப்போடு, "பசுமை புரட்சி" எனும் மரம் நடுகை செயற்றிட்டம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் இன்று பொது இடங்கள், பாடசாலைகள், ஆலயங்களிலும் நாளை இளவாலை கிராமத்தை உள்ளடக்கிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தரால் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கான மரக்கன்று வழங்கல் நிகழ்வும் நாளை மறுதினம் மேலும் சில தெரிவு செய்யப்பட்ட இடங்களும், மரக்கன்று தேவைப்படும் ஏனைய கிராம மக்களுக்கும் மரக்கன்று வழங்கல் இடம் பெறவுள்ளது.

மரக்கன்றுகள் தேவைப்படுவோர் 077 064 1114, 077 541 7659, 075 526 8535 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும். (9-281)

# தேசிய கலாசார திணைக்களம் கலைஞர்களை ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 70 கலைஞர்களுக்கு 7 இலட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ்.கிஸ்ண குமார் தெரிவித்தார்.

தேசிய கலாசார திணைக்களத்தால் நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களை கௌரவிக்கும் முகமாகவும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 15 பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்களுக்கே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (5-10)

# வெலிசவிய திட்டத்தில் 48 பேருக்குப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தென்னையில் ஏற்படும் நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு வெலிசவிய திட்டத்தில் 48 பேருக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக வடமாகாணத் தெங்குப் பயிர்ச்செய்கையின் பிராந்திக முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி குறித்த பயிற்சியாளர்கள் நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பயிற்சி நெறி முடிவுற்றதும் தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் தமது தென்னைகளில் ஏற்படும் நோய்த் தாக்கத்தைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# மின்சாரம் தடைப்படும் நேரங்களில் நோயாளர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர்

வரணி பிரதேச வைத்தியசாலையில் மின் பிறப்பாக்கி இல்லாமையால் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் வைத்தியச் செயற்பாடுகள் தடைப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது கொடிகாமம் -பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகள் இடம்பெற்று வருவதன் காரணமாக மின் கம்பங்கள் பிடுங்கி இடம் மாற்றப்படுகின்றன. இதனால் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்கள் மின்சாரம் தடைப்படுகிறது. குறித்த தினங்களில் வரணி பிரதேச வைத்தியசாலைக்கு ஆவி பிடித்தல்(ஆஸ்துமா).பற் சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றிற்கு சிகிச்சை பெற வருவோர் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே நோயாளர்களின் நன்மை கருதி மின் பிறப்பாக்கி ஒன்றினை வைத்தியசாலை நிர்வாகம் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக வரணி வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் ப.அச்சுதனிடம் வினவிய போது,

இதுவரை இரண்டு தடவைகள் எமது வைத்தியசாலைக்கு மின் பிறப்பாக்கி அவசியம் வேண்டுமென கோரிக்கை விடுத்தும் இன்றுவரை எமது வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி கிடைக்கவில்லை. இதனால் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் சிகிச்சை பெற வருவோர் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் முரண்படுகின்ற நிலை காணப்படுகிறது. தற்போது வடமராட்சி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் இருந்தும் அதிகளவான நோயாளர்கள்வரணி வைத்தியசாலையை நாடி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-30)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

லிற்றில் மாஸ்ரேஸ் பாலர் பாடசாலை விளையாட்டு விழா நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் தலைவர் கி.சதீஸ்குமார் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர்.திருமதி.கி.கமலராணி, சிறப்பு விருந்தினர்களாக யா/ இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ. துரைசிங்கம், யாழ்.பிரதேச செயலை முகாமைத்துவ உதவி யாளர் வ.தனகோபி, கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி செ.செல்வக்குமார், ஜே/189 இணுவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் வை.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

(யாழ்ப்பாணம்)

புலோலி, உத்திராவத்தை அன்பு மலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புலோலி கிழக்கு மத்திய சனசமூக நிலையம் முன்றலில் திருமதி.பிறேமா மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் க.வேலாயுதம், சிறப்பு விருந்தினராக புலோலி வட கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி.தேவகி விஜயகாந், கௌரவ விருந்தினராக யா/புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை அதிபர் க.நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில், யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள **DHXW FF 503232** இயந்திர இலக்கமும் **MD2A11C25 FWE 4515** இலக்க செசியும் கொண்ட மோ.சைக்கிள் -01 இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது. எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதுவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# தொழில்நுட்ப குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தொழில்நுட்பக்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் தொழில்நுட்பக் குழுத் தலைவர் இ. ஜங்கரன் தலைமையில் இடம் பெறும்.


இந் நிகழ்விற்கு தொழில்நுட்பக் குழு அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-10-134)

# பகவத் கீதை விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.' சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசனந்தாவால் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் நடத்திவரும், ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரையில் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணிவரை ஸ்ரீமத் பகவத்கீதை இரண்டாம் அத்தியாயத்தில், "எழுந்திரு" என்னும் தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள்ளது.

இவ்விரிவுரை,நேரலையாக, **Chinmaya Mission, Jaffna (FB Page)** எனும் முகநூல் பக்கத்தில், ஒளிபரப்பட இருக்கின்றது எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (5)



தாயகம் அறக் கொடை நம்பிக்கை நிதியம் கடந்த 30 ஆம் திகதி நல்லூர். மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவர்களுக்கு சீருடை 95, சப்பாத்து 95,துவிச்சக்கர வண்டி 7 என்பவற்றை வழங்கியது.

# அபிவிருத்தி உபாய மார்க்கம் குறித்து தெளிவில்லாதவர்களே நாட்டை நிர்வகிக்கின்றனர்

## டி.யூ.குணசேகர குற்றச்சாட்டு

(கொழும்பு)

அபிவிருத்தி உபாய மார்க்கம் குறித்து தெளிவில்லாத தரப்பினரே, தற்போது நாட்டை நிர்வகித்து வருகின்றனர் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டி.யூ.குணசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், இதனால்தான் நாடு பொருளாதார ரீதியாக இன்னும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் அவர் விசனம் வெளியிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "ஆசியாவில் அபிவிருத்தி நடவடிக்கைகள், இன்று வேகமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.


வடக்காசியா, கிழக்காசியா, தெற்காசியா என அனைத்தும் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன.

எனினும், தெற்காசியாவைப் பொறுத்தவரை இலங்கைதான் மிகவும் மந்தமான நிலையில் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஆப்கானிஸ்தானும் விரைவில் எம்மை பின்தள்ளும் ஒரு நிலைமையே காணப்படுகிறது. இந்தச் செயற்பாட்டை மாற்றியமைக்காமல் நாம் முன்னோக்கி பயணிக்கவே முடியாது.

நாம் புதிய சந்தைகளை உருவாக்க வேண்டும். அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும்தேயிலையை மட்டும் ஏற்றுமதி செய்து எமது பொருளாதாரத்தை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

இன்று சீனாவை எடுத்துக் கொண்டால், அந்த ஒரு நாட்டில் மட்டும் சந்தைப் பெறுமதி, 900 மில்லியனாகக் காணப்படுகிறது.



இதுதான் வளர்ச்சி. புதிய புதிய முயற்சிகளை சந்தையில் அறிமுகப்படுத்தியமையே இதற்கான காரணமாக இருக்கிறது.

எனினும், இது எமது அரசியல் வாதிகளுக்கு தெரிவதில்லை. விளக்கம் இல்லாத அமைச்சரவையும் அரசாங்கமும்தான் தற்போது நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்கிறது.

இவர்களுக்கு அபிவிருத்தி உபாய மார்க்கத்தை பலப்படுத்துவதற்கான சக்திகூட இல்லை" என மேலும் தெரிவித்தார். (7)

# வவுனியாவில் அதிசய வாழைக்குலையை பார்வையிடச் செல்லும் மக்கள் கூட்டம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் அதிசயமான வாழை மரம் ஒன்று பொத்தி வர முன்பே வாழைக்குலை வெளியே தெரிவதைப்பார்வையிடுவதற்கு மக்கள் சென்று வருகின்றனர்.

வவுனியா கல்வியியற்கல்லூரி வீதி, அண்ணாநகர், பூந்தோட்டம் பகுதியில் நேற்று வீட்டு வளவிலுள்ள வாழை மரம் ஒன்றிலிருந்து விசித்திரமான முறையில் வாழைத்தண்டின் நடுவே பொத்தி வெளியேயும், வாழைக்குலை வெளியேயும் தெரிவதால் இவ் அதிசய நிகழ்வை பார்வையிடுவதற்காக அங்கு மக்கள் சென்று வருகின்றதாக வீட்டின் உரிமையாளர் நாகராசா சுதாகரன் தெரிவித்தார்.

வழமையாக வாழையிலிருந்து பொத்தி வெளியே வந்துதான் குலை வருவது வழக்கம். ஆனால் இன்று இரண்டும் சரிசமனாக வெளியே தெரிகின்றது.

இவ்வாறான அதிசய நிகழ்வுகள் ஆயிரத்தில் ஒன்று தென்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (9-299)

# மரண தண்டனைக்கு எதிரான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதை தடுத்து நிறுத்துமாறு தெரிவித்து ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட ரீட் மனு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த மனு இன்று வெள்ளிக்கிழமை வரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று தலைமை நீதிபதி யசந்த கோதாகொட, தீபாலி விஜேசுந்தர, அச்சல வெங்களப்புலி, அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின் போது சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்து அடிப்படை ஆட்சேபனை வெளியிட்டார்.

இந்த மனுவின் மூலம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கடமையை கேள்விக்கு உட்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் இதனால் அரசியல் யாப்பின் 35 ஆவது சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் பிரதி செலிசிஸ்டர் ஜெனரல் கூறினார்.

இதனையடுத்து மனுவின் மேலதிக விசாரணை இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (7)


# விலைக்கேள்விக்கான கோரல்
# சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

## அரச முதியோர் இல்லம்-கைதடி மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை-2019

01. வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள (CIDA) தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule இல் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா. முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி கைதடி , யாழ்ப்பாணம் (தொலைபேசி இல : 021 320 2464) என்னும் முகவரியில் 09.07.2019ஆம் திகதியில் இருந்து 23.07.2019ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு (மூலம், பிரதி) பிரதிகளில் தயாரித்து 24.07.2019ஆம் திகதியன்று மு.ப.10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா. முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி, கைதடி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்களுக்கு (24.09.2019 வரை) செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா. முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி கைதடி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 17.07.2019 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்)(வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/24/AIP/2019/PSDG/SHE WARDS | RENOVATION OF WARDS AND WATER SUPPLY SYSTEM OF STATE HOME FOR ELDERS | 1.714 | 2Months | C8/C9 (Building) | 18,000.00 | 21.10.2019 |
| 2 | NP/24/AIP/2019/PSDG/SHE TOILETS | RENOVATION OF TOILETS AND BATH ROOMS OF STATE HOME FOR ELDERS | 1.711 | 2Months | C8/C9 (Building) | 18,000.00 | 21.10.2019 |

தலைவர், திணைக்கள பெறுகைக்குழு,
சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா.

(C-6860)

# என் மீதான குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லையென்பது நிரூபணமாகியுள்ளது

## ஹிஸ்புல்லா மகிழ்ச்சி



தன்மீது சுமத்தப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டும் உண்மையானவை அல்ல என்பது அனைத்து வகையான விசாரணைகள் ஊடாகவும் தற்போது நிரூபணமாகியுள்ளதாக கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

முன்னாள் போராளியொருவர் செய்திருந்த முறைப்பாடு குறித்து, திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பிரிவில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை வாக்கு மூலம் வழங்கியதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "முன்னாள் போராளியொருவர் என்னாலோ அல்லது எனக்கு நெருங்கிய ஒருவராலோ தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடளித்துள்ளார். அது விசாரணைகளின் ஊடாக பொய்யான ஒரு தகவல் எனத் தெரியவந்துள்ளது.

எனினும், இதுகுறித்து எனது வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே நான் இங்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

தற்போது, எனக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் என்பது பொலிஸாரின் விசாரணையின் ஊடாக தெரியவந்துள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் கலகொட அத்தே ஞானசார தேரரின் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் பொய்யானவை என்று உறுதியாகியுள்ளது எனவும் இதனை என்மீது குற்றம் சுமத்திய தரப்பினர் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதுகுறித்து என்னால் கருத்து கூறமுடியாது" என மேலும் தெரிவித்தார். (7)

# பரீட்சைக் காலங்களில் களியாட்ட நிகழ்வுகள் வேண்டாம்

## சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு

வவுனியாவில் பரீட்சைக் காலங்களில் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளை குழப்பும் விதமாக நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நாளை இசைக்கச் சேரியும் 10 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரையில் வவுனியா வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்காவில் கானிவேல் நிகழ்வும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் குறித்த நிகழ்வுகள் தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இவ் விடயம் குறித்து கல்வியியலாளர்கள் மற்றும் பெற்றோர்கள் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை வவுனியா வைரவபுளியங்குளம் சிறுவர் மைதானத்தில் கானிவேல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 15 ஆம் திகதி இரண்டாம் தவணைப்பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் மக்கள் குடிமனைகள் உள்ள இடத்தில் இவ்வாறான நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தவணைப்பரீட்சைகள் 9 ஆம் ஆண்டுக்கு மேற்பட்டவர்களுக்கு மாகாண மட்டத்திலான பரீட்சையாக இருக்கும் நிலையில் இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதானது எமது மாவட்ட மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு வழி சமைக்கும் செயற்பாடாக அமையும். அத்துடன் ஒலிபெருக்கிகளில் சத்தம் அதிகரிக்கும் போது மாணவர்களுக்கு கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்பதுடன் அடுத்த மாதம் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இவை பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும்போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதுடன் நகரசபையும் இதற்கான அனுமதி வழங்கும் போது மக்களின் நலனிலும் அக்கறை கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் இதற்கான அனுமதி கொடுக்கப்பட்டமை தொடர்பாக வவுனியா நகரசபை தலைவரிடம் கேட்டபோது,

இது ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வு. இதுவரை எந்தவிதமான எதிர்ப்பும் எமக்கு கிடைக்கவில்லை. அப்பகுதி மக்களும் இந் நிகழ்வுக்கு அனுமதி அளித்தமைக்கான கடிதங்கள் எமக்கு காட்டப்பட்டதன் பின்னரே அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் பல நாட்களாக இந் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டதன் பின்னர் தற்போது அனைத்து ஒழுங்கமைப்பினையும் ஏற்பாட்டாளர் செய்த பின்னர் நிறுத்துமாறு தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக ஆட்சேபனை இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக என்னுடன் தொடர்புகொள்ளமுடியும் என தெரிவித்தார். (9-299)

# சஹ்ரானின் போதனையில் கலந்து கொண்டதாக கைது செய்யப்பட்ட இளைஞன் பிணையில் விடுதலை

தேசிய தௌஹீத் ஜமாத்தின் மார்க்க போதனை நிகழ்வில் கலந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் கல்முனை நீதவான் நீதிமன்றால் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 29ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மருதமுனையை சேர்ந்த ஏ.எச்.நில்ஷாத் எனும் நபரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இவரது கைது விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நடவடிக்கையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட மனு நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனை நீதவான் நீதி மன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸ் சார்பில் ஆஜரான அப்துல் ஹை குறித்த நபர் மீதான வழக்கை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் முன்னெடுப்பதற்கான காரணமெதும் இல்லை என அறிவித்ததைத் தொடர்ந்து இவரை பிணையில் விடுவிக்குமாறு கோரி இவர் சார்பில் ஆஜரான சட்டத் தரணிகள் அதற்கான நியாயங்களை முன்வைத்து வாதிட்டனர்.

இவற்றை செவிமடுத்த நீதவான் சந்தேக நபரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன் இவ் வழக்கு முடிவுறும் வரை ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று கல்முனை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என சந்தேக நபரைப் பணித்ததுடன் வெளிநாட்டு பயணங்களுக்கும் நீதவான் தடையுத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கு நீதவானால் ஒத்திவைக்கப்பட்டது. (9-281)

# தேசிய மொழிகள் தின விழிப்புணர்வு செயலமர்வு





அரசகருமமொழி கொள்கையை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசகரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தும் வாரம் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவின் நெறியாள்கையின் கீழ் வவுனியா பிரதேச செயலகத்தில் தேசிய மொழிகள் தின விழிப்புணர்வு செயலமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

செயலமர்வில் மொழி உரிமை மீறல், மொழியின் தேவை, மொழி ஏன் அவசியம் மொழி சம்பந்தமான விளக்கங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

இவ் விழிப்புணர்வு செயலமர்வில் உதவி பிரதேச செயலாளர் பிரியதர்சினி, விமானப் படையினர், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள், சகவாழ்வு சங்க உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

## வித்தியா கொலை வழக்கில்

# தலைமறைவாகியுள்ள உப பொலிஸ் பரிசோதகர் தொடர்பில் விசாரணையை முன்னெடுக்க உத்தரவு

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமாரை விடுவிக்க உதவிய குற்றச்சாட்டில் முன்னாள் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.

இவ் வழக்கின் முக்கிய சூத்திரதாரியாக கூறப்படும் சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உபபொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரிகையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ சேனாதிராசா உள்ளிட்ட 30 பேரை வரை சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவது சந்தேகநபர் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க முன்னிலையானார். இரண்டாவது சந்தேகநபர் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளதால் அவர் மன்றில் முன்னிலையாகவில்லை.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார். முதலாவது சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி துஷித் ஜோன்சன் முன்னிலையானார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இரண்டாவது எதிரி எங்கே? அவர் தொடர்பில் தகவல் உண்டா? என்று வழக்குத் தொடுநரிடம் மன்று கேள்வியெழுப்பியது.

"இரண்டாவது எதிரி சட்டவிரோதமாக நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் உள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அதன் உண்மைத் தன்மை தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை.

அவர் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்" என்று அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றுரைத்தார்.

அத்துடன், இந்த வழக்கை முன்னெடுக்க சட்டமா அதிபரால் சிறப்பு அரச சட்டவாதி சட்டமா அதிபரால் நியமிக்கப்படுவார் எனவும் அரச சட்டவாதி மன்றுக்கு அறிவித்தார்.

இரண்டாவது எதிரி தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர், வழக்கு விசாரணையை செப்டெம்பர் 27ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். (9-10)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான

## 50 ரூபா மேலதிகக் கொடுப்பனவை பெற்றுக் கொடுப்போம்

### திகா, ரவி வாக்குறுதி





(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 50 ரூபா மேலதிக கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்காமல் மலையக மக்களை நாங்கள் ஏமாற்றிவிட்டோம் என்று சிலர் கூறுகின்றனர் என்றும் நாங்கள் தொடர்ந்தும் மக்களின் நலன்கருதியே செயற்பட்டு வருகின்றோம் என்றும் அமைச்சரவையில் அனுமதிபெற்று இம் மாதத்திலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அமைச்சர்களான ப்ழனி திகாம்பரம் மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் வாக்குறுதி வழங்கியுள்ளனர்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 75 இளைஞர், யுவதிகளுக்கு பெருந்தோட்ட சமூகத் தொடர்பாடல் வசதியளிப்பாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு வாக்குறுதி வழங்கியுள்ளனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்ததாவது.

அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை சமூகத்தின் அடிமட்டம் வரை கொண்டு செல்லும் நோக்கில் மலையக இளைஞர். யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கி இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் மலையக மக்களே அடிப்படை வசதிகள், தொழில்வாய்ப்பு. வாழ்வாதாரம் என அனைத்து விதங்களிலும் மிகவும் மோசமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள். அந்த மக்களுக்கு அனைத்து விதங்களிலும் எம்மாலான சேவைகளை, அபிவிருத்தித் திட்டங்களை, வசதிகளை செய்து கொடுத்து வருகிறோம்.

எனினும் நாங்கள் 50 ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டதாக சில காட்டிக்கொடுக்கும் நபர்கள் கூறுகிறார்கள். நானும், அமைச்சர் மனோகணேசனும் இணைந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 50 ரூபா மேலதிக கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்போம்.

அதுகுறித்து வேறு எவரும் உரிமைகோர முடியாது. அதே போன்று எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யாரை வேட்பாளராகக் களமிறக்கினாலும் அவருக்கு ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதுடன், அரசாங்கத்துடன் இணைந்து மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதை முன்னிறுத்தி செயற்படுவோம் என மேலும் தெரிவித்தார். (7)

# குறை'களை' பதிகம் 57

## காவலற்ற கடவையும் காவு கொள்ளப்படும் உயிர்களும்...

*வேலியற்ற பயிர்களை*
*விலங்கினங்கள் அழித்து விடுவதை போல*
*காவலற்ற கடவையில்*
*மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன.*

*கொழும்புத்துறை நெடுங்குள வீதியைக்*
*குறுக்கறுத்துச் செல்லும் தொடரூந்தும் பாதையை*
*அடுத்து அமைந்துள்ள கடவை*
*ஆரம்பத்திலிருந்தே சீராக இயங்கவில்லை.*

*உயர்மட்ட அதிகாரிகளிடம் பலமுறை*
*முறையிட்டும் பலனேதுமில்லை.*

*மேலும் பல உயிர்களையும் விபத்துக்களையும்*
*தவிர்க்க வேண்டுமாயின் இத் தொடரூந்துக் கடவை*
*தகுந்த முறையில் நிர்மாணிக்கப்பட்டு, நிர்வாகிக்கப்பட வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.*

க.இராசதுரை
கொழும்புத்துறை.

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை'பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# மலையகத்திற்கான புகையிரத சேவைகள் பாதிப்பு

புகையிரத சேவையாளர்கள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, மலையகத்திற்கான சகல புகையிரத சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.


இதனால் புகையிரதத்தில் பயணம் செய்யும் மாணவர்கள் அரச ஊழியர்கள் உட்பட பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, மலை யக பகுதியில் உள்ள புகையிரத நிலையங்களின் கதவுகள்யாவும் பூட்டப்பட்டு இருந்ததுடன், பயணிகள் ஓய்வு அறை, உணவகம் உட்பட அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன. குறித்த வேலை நிறுத்தப் போராட்டம் புகையிரத திணை க்கள ஊழியர் ஒருவர், கடமை நேரத்தில் மதுபானம் அருந்தி இருந்ததற்காக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு, பொது போக்குவரத்து செயலாளர் ஒருவர் அழுத்தம் கொடுப்பதாக எதிர்ப்புத் தெரிவித்தே, இந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (7)

# மட்டக்களப்பு புதூர் பகுதியில் பதற்றம்; இராணுவத்தினர் விசேட சுற்றிவளைப்பு





(புதூர்)

மட்டக்களப்பு புதூர் பகுதியில் இராணுவத்தினர் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், இதன் காரணமாக அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மட்டக்களப்பு புதூர் சிமில தீவுப் பகுதியில் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை தடுத்து நிறுத்துவதற்கு போக்குவரத்து பொலிஸார் முயற்சித்துள்ளனர்.

எனினும், நிறுத்தாமல் சென்ற குறித்த இருவரும் எதிரே வந்த பட்டா ரக வாகனத்துடன் மோதுண்டனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் குவிந்த இளைஞர்கள் சிலர் போக்குவரத்துப் பொலிஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்ததுடன் ஒருவர் போக்குவரத்துப் பொலிஸாரின் கைத்துப்பாக்கியை பறித்துக்கொண்டு ஓடியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே மட்டக்களப்பு புதூர் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (7)

# குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படாததனால் வைத்தியர் ஷாபியை தடுத்து வைப்பது முறையல்ல

## குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பு

குருநாகல் வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் எந்தவித தீவிரவாத செயற்பாடுகளுடனும் தொடர்புபடாத நிலையில் அவரை தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது முறையானது அல்ல என குற்றப்புலனாய்வுப்பிரிவினர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ள னர்.

வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி முதல் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள தீவிரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாததனால் அவர் மீதான தடுப்புக்காவலை இரத்துச் செய்வது நல்லது என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

அதேவேளை இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே கடந்த 27 ஆம் திகதி குருநாகல் நீதி மன்றத்தில் தெரிவித்ததாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஜனாதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் கவனம் செலுத்தியுள்ள பாதுகாப்புப் பிரிவினர்

(கொழும்பு)

ஜனாதிப்திக்கு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உயிர் அச்சுறுத்தல் குறித்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் கவனம் செலுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.



நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஜனாதிபதிக்கு உயிர் ஆபத்து இருப்பதாகத் தெரிவித்துள்ள கருத்துக் குறித்து பொலிஸார் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (7)

# வரட்சியின் கோரம்

## வவுனியாவில் குடிநீர் தட்டுப்பாடு அதிகரிப்பு

வவுனியாவில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், சிறுபோக நெற்செய்கையும் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வரட்சியான காலநிலை நீடித்து வருகின்றது. இதன்காரணமாக 177 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

குளத்து நீர் வற்றிய நிலையில் கால்நடைகளும் நீரின்றி அவதிக்குள்ளாகியுள்ளன. ஆச்சிபுரம், தட்டான்குளம், மருதோடை, ஆசிகுளம், கற்குளம் போன்ற பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவிக்கையில்,

வரட்சி காரணமாக வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவில் 12 ஏக்கர் நெற்செய்கையும், நெளுக்குளம் கிராம அலுவலர் பிரிவில் 18 ஏக்கர் நெற்செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவின் மாமடு கிராம அலுவலர் பிரிவில் 100 ஏக்கர் நெற்செய்கையும், கல்மடு பிரிவில் 15 ஏக்கரும், மகாகச்சகொடி கிராம அலுவலர் பிரிவில் 10 ஏக்கரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குருக்கள் புதுக்குளம் கிராம அலுவலர் பிரிவில் 22 ஏக்கரும் பாதிப்படைந்துள்ளது.

இது தவிர, வவுனியா வடக்கு, மருதோடை கிராம அலுவலர் பிரிவில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான குடிநீர் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்தார். (9-250)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் ம.கஜந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் முதல் நிகழ்வாக சாரதிகளாக இருந்து முகாமைத்துவ உதவியாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றவர்களுக்கும் ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் கலந்து கொண்டார்.

சங்கத்தின் தலைவராக கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தின் சாரதி சி.சந்திரனும் செயலாளராக மாகாண யாழ். பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலக சாரதி சி. சுதர்சனும் பொருளாளராக மாகாண கணக்காய்வுத் திணைக்கள சாரதி ந.அச்சுதனும் உப தலைவராக மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகச் சாரதி பு.சிவவேலகனும் உப செயலாளராக வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகச் சாரதி இ.குலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (9-271)

## நீராவியடிப் பிள்ளையார் ஆலய பொங்கல் விழா ஏற்பாடுகள் பூர்த்தி





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை இடம்பெறவுள்ள வருடாந்த பொங்கல் உற்சவத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில் நேற்று சிரமதானப் பணிகள் உள்ளிட்ட இதர வேலைகளில் ஆலயத் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

நாளை அதிகாலை 3 மணிக்கு கோட்டக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மடப் பண்டம் எடுத்து வரப்பட்டு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆண்டு உற்சவம் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் நேற்று காலை முதல் ஆலய வளாகத்தில் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு செம்மலை, அளம்பில் பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் சிரமதானப் பணி உள்ளிட்ட ஏனைய வேலைகளில் ஈடுபட்டனர். (9-281)

## வீட்டுத்திட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை பூநகரி பிரதேச வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவிப்பு

பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என பயனாளிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பல்வேறு இன்னல்களின் மத்தியில்வீட்டின்கட்டுமானபணிகளை நிறைவுசெய்யும் தறுவாயில் இருந்தும் இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டுத்திட்டத்துக்கென ஒரு சிலருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு முதல் கட்டமாக கொடுக்கப்பட்ட ஐம்பதாயிரம் ரூபாவைத்தவிர வேறு எந்த கொடுப்பனவும் இதுவரை வழங்கப்படவில்லை என வீட்டுத்திட்ட பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல இலட்சக்கணக்கான பணத்தை கடன்பட்டும் வட்டிக்கும் எடுத்து தாம் வீடுகளை அமைத்துள்ள போது கட்டமான பணிகளை நிறைவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளனர். மேலும் இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிட்டும் ஒரு பலனும் கிடைக்காத நிலையில் சொல்லொணாத்துன்பங்களுக்கு ஆளாகியிருப்பதாக தெரிவிக்கின்றனர்.


இந்த விடயம் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்குமாறு வீட்டுத் திட்ட பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-84)




## வீதியை புனரமைக்குமாறு கோரி வவுனியாவில் மக்கள் போராட்டம்







(வவுனியா)

வவுனியா மன்னார் பிரதான வீதி, பூவரசன்குளம் சந்தியிலிருந்து செட்டிகுளம் செல்லும் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி நேற்று வீதியை வழிமறித்து அப்பகுதி மக்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பூவரசன் குளம் சந்தியிலிருந்து செட்டிகுளம் செல்லும் பிரதான வீதி பல ஆண்டுகளாக புனரமைப்புச் செய்யப்படவில்லை. பல போராட்டங்களை மேற்கொண்டும் எவ்வித நடவடிக்கையும் இன்றுவரையிலும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்த தட்டான்குளம், சண்முகபுரம், வாரிக்குட்டியூர், கங்கன்குளம், மணியர்குளம் மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தினை மேற்கொண்டனர்.

ஆட்சியாளர்களே செட்டிகுளம் . பூவரசங்குளம் வீதியை உடனடியாக புனரமைத்துக்கொடு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்திற்கு வழியேற்படுத்திக் கொடு, எமது பிரதேசத்திலுள்ள நோய்வாய்ப்பட்டவர்களை மரணப் பொறியில் தள்ளாதே, நாம் இருப்பது வரிப் பணம் செலுத்துவதற்கு மட்டுமா?, அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்கள்.எமக்குப்பயணிப்பதற்கு சீரான பாதைகள் இல்லை போன்ற பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் மக்கள் கலந்து கொண்டனர்.

போராட்ட இடத்திற்குச் சென்ற வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர் ஆர்.எச். உபாலி சமரசிங்கவிடமும், பூவரசன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் தமது மகஜரினைக் கையளித்து போராட்டத்தினை நிறைவு செய்துள்ளனர்.

இதனால் அப்பகுதி வீதியூடான போக்குவரத்து சற்றுத் தடைப்பட்டதுடன் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொண்டமை குறிப்பிடத்

## சொத்தழிவுக்கான இழப்பீடும் சுயதொழில் கடன் வழங்கலும்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட சுய தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் யுத்த கால சொத்தழிவுகளுக்கான இழப்பீடு வழங்குதல் என்பவற்றுக்கான பயனாளிகள் தெரிவு நடவடிக்கை நேற்று முன்தினம் புனர்வாழ்வு அதிகாரசபையின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் யுத்த காலத்தின் போது ஏற்பட்ட சொத்தழிவுக்காக விண்ணப்பித்தவர்களுக்கான மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், சுய தொழில்முயற்சியாளருக்கான கடன் வழங்குவதற்காக பயனாளிகளை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வும் இடம்பெற்றது.

இதில், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் மற்றும் கடன்கள் என்பன விரைவில் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் திஸாநாயக்க, வவுனியா உதவி பிரதேச செயலாளர், வங்கி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# கொடுப்பனவின்றி பதில் கடமைகளை மேற்கொள்ளமாட்டோம்

## வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து பதில் கடமைக் கொடுப்பனவின்றி பதில் கடமைகளை மேற்கொள்வதில்லை என வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சகோதர அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமான அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினால் ஜனாதிபதி மற்றும் உரியவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத் தீர்மானம் தொடர்பான தகவல் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலுக்கு அமைவாக வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமும் இத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக அனைத்து அலுவலகங்களுக்கும் இத் தீர்மானம் தொடர்பான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பதில் கடமைக் கொடுப்பனவின்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் யாரும் பதில் கடமைகளில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அவ்வாறு யாராவது பதில் கடமையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தினால் அது தொடர்பில் எமக்கு அறியத்தரவும்.

இது தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர் நோக்கும் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் உரிய நடவடிக்கைகளையும் பூரண பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ளும்.

எமக்கான உரிமைகள் உங்கள் ஒத்துழைப்பின்றி பெற முடியாது. எனவே அனைவரும் தயவு செய்து ஒற்றுமையுடன் செயற்படுமாறு வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பில் தெரிவிப்பதற்கு. 077 376 0039 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)




# வருடாந்த மஹோற்சவம்

வவுனியா குருமன்காடு ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் இடம் பெறவுள்ளன.

12 ஆம் திகதி இரவு மாம்பழத் திருவிழாவும்,13 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் கிராம ஊர்வலமும் இடம்பெறும். 13 ஆம் திகதி காலை புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட பெருவிழாவும், இரவு சப்பறத் திருவிழாவும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம் பெறும். (9)

# வவுனியாவில் உள்ள சிறுவர் இல்லங்களின் நிதி விபரங்கள் கணக்காய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்

## சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

வவுனியாவில் உள்ள சிறுவர் இல்லங்களின் நிதி விடயங்கள் கணக்காய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியாவில் 6 சிறுவர் இல்லங்கள் செயற்பட்டு வருகின்ற நிலையில் 3 சிறுவர் இல்லங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே குறித்த சிறுவர் இல்லங்கள் தொடர்பில் அரச கணக்காய்வு திணைக்களம் நிதி விடயங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

சிறுவர் இல்லங்களுக்கு வெளியாரின் நிதிப்பங்களிப்புகளே அதிகளவில் கிடைத்து வருகின்றன. அவற்றிலும் புலம் பெயர் நாடுகளில் இருந்து கருணை உள்ளம் கொண்டவர்களின் நிதிப்பங்களிப்பு அதிகளவில் கிடைத்து வருகின்றது.

இந்நிலையில் இந் நிதிகள் முறையான விதத்தில் கையாளப்படுகின்றதா? மோசடிகள் இடம்பெறுகின்றதா? என்பது தொடர்பில் கணக்காய்வு திணைக்களம் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் சில சிறுவர் இல்லங்களில் நிதி மோசடிகள் இடம்பெறுவது தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவரிடம் கேட்ட போது,

சிறுவர் இல்லங்களின் கணக்காய்வுகள் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களின் ஊடாக வருடாந்தம் எமக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். அதனை நாம் மேலிடங்களுக்கு அனுப்பி வைப்போம். இந் நிலையில் குறித்த கணக்குகளில் மோசடிகள் இடம்பெறுமாக இருந்தால் அது தொடர்பில் நாம் கவனம் செலுத்துவோம் என தெரிவித்தார். (9-299)

# பெண் ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம்



உரிமைகளை வென்றெடுப்பதற்காக வடமாகாண பெண் ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் நேற்று கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வட பகுதியில் ஊழியர்களாக தொழில் புரியும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அது தொடர்பான விழிப்புணர்வும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பெண் ஊழியர்கள் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டர். (9)

# தொழிற்பயிற்சி அதிகார சபையின் முன்னோடி பயிற்சிக் கருத்தமர்வு





(நெளுக்குளம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் முன்னோடி பயிற்சி கருத்தரங்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் வீ.கனகசுந்தரம் நெறியாள்கையின் கீழ் இடம்பெற்ற இப் பயிற்சி கருத்தரங்கில் 2019ஆம் ஆண்டு 2ஆம் பிரி வுக்கான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி படவரைஞர் , தையல், மின்னியலாளர் , அழகுக் கலை மற்றும் சிகையலங்காரம், அலுமினியம் பொருத்து நர் போன்ற பல்வேறு பயிற்சி நெறிகளில் (NVQ-3,NVQ4) பயிலவுள்ள மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் இவ் அனைத்து பயிற்சி நெறிகளும் இலவசமாக கற்பிக்கப்படுவதுடன் தூர தேசங்களிலிருந்து கற்கை நெறியை தொடருகின்ற மாணவர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட உயர்ஸ்தானிகர்



கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட ஜேர்மன் நாட்டின் உயர்ஸ்தானிகர் ஜான் ரோட், தற்போது தொழில்நுட்பக் கல்லூரியின் நிலைகள் தொடர்பாக தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

குறித்த தொழில்நுட்பக் கல்லூரிக்கான உதவிகள் ஜேர்மன் அரசாங்கத்திடமிருந்தும், இலங்கை அரசிடமிருந்தும் கிடைத்து வந்தன. தற்போது இரு நாட்டு உதவியும் கிடைக்காத நிலையில் தொழில்நுட்பக் கல்லூரியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் மேற்குறித்த விஜயத்தை உயர்ஸ்தானிகர் மேற்கொண்டுள்ளதுடன் அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடியிருந்தனர். (9-312)



வவுனியா தோணிக்கல் ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

# புகையிரத ஊழியர்களின் வேலை நிறுத்தம் பயணிகள் பாதிப்பு

புகையிரத தலைமை அதிகாரிக்கு போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளால் அச்சுறுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக புகையிரத ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் வவுனியா புகையிரத நிலையம் மூடப்பட்டு பொலிஸார் மற்றும் விமானப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதனால் பயணிகள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

புகையிரத நிலையத்திற்குச் சென்ற பயணிகள் புகையிரத ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக திரும்பிச் சென்றனர். (9-299)




# எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் வெளிநாட்டு சிறைகளில்

## மத்தியவெளியுறவு இணையமைச்சர்கள் தகவல்

(சென்னை)

வெளிநாட்டுச் சிறைகளில் சுமார் 8189 இந்தியர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவு இணை அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமர்வுகளின்போது, வெளிநாடுகளில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் குறித்து கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "பல்வேறு வெளிநாட்டு சிறைகளில் 8189 இந்தியர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதில் வளைகுடா நாடுகளில் மட்டும் 4206 பேர் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

வெளிநாட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்தியர்களில் அதிகபட்சமாக 1811 பேர் சவுதி அரேபியாவிலும், அமீரகத்தில் 1392 பேரும் உள்ளனர்"

இந்தியா-அமீரகம் இடையே கைதிகளை பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தம் கடந்த 2013 ஆம் ஆண்டுமுதல் அமுலுக்கு வந்திருந்தாலும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அமீரகம் இதுவரை எந்த கைதியையும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவில்லை என முரளிதரன் அவையில் மேலும் சுட்டிக்காட்டினார். (7)

# காலம் அனைத்திற்கும் பதில் கூறும்

## தினகரன் தெரிவிப்பு



நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தங்கள் கட்சி தோல்வியடைந்தமையால் பலரின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது என்றும் அவை அனைத்திற்கும் காலம் பதில் சொல்லும் என்றும் அ.ம.மு.கவின் பொதுச் செயலாளர் டி.டிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் அஹ்ரகார சிறையில் சசிகலாவை சந்தித்த அவர், செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், தளபதிகள் யாரும் கட்சியில் இருந்து வெளியேறவில்லை என்றும் கட்சியின் உறுப்பினர்களே வெளியேறியுள்ளனர் எனவும் விளக்கமளித்துள்ளார்.

அத்துடன் வெளியில் பேசுபவர்கள் பதவி இருக்கின்ற மமதையில் பேசுகிறார்கள் என குறிப்பிட்ட அவர், காலம் அனைத்திற்கும் பதில் கூறும் என மேலும் தெரிவித்துள்ளார். (7)

# ஐதரோகாபன் திட்டத்திற்கு அனுமதி வழங்கமாட்டோம்

## தமிழக அரசு திட்டவட்டம்

(சென்னை)

தமிழகத்திற்கு ஐதரோ காபன் திட்டத்திற்கு அனுமதி வழங்கமாட்டோம் என தமிழக அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஐதரோ காபன் திட்டம் குறித்து தி.மு.க சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானமொன்றை சட்ட பேரவையில் கொண்டுவந்தது.

குறித்த தீர்மானத்திற்கு பதிலளித்த கனிமவளத்துறை அமைச்சர் சண்முகம், தமிழக அரசு எந்த காலத்திலும் ஐதரோ காபன் திட்டத்தினை கொண்டுவராது என கூறினார். அத்துடன் ஐதரோ காபன் திட்டத்திற்கு தி.மு.க வழங்கிய அனுமதியை இரத்து செய்ததே அ.தி.மு.க அரசுதான் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில், அமைச்சர் சண்முகத்தின் இந்தக் கருத்துக்கு எதிராக, ஐதரோ காபன் திட்டம் குறித்து ஆய்வு செய்யவே தி.மு.க அனுமதி வழங்கியதாக அக்கட்சியின் உறுப்பினர் டி.ஆர்.பி ராஜா தெரிவித்தார். (7)

# இந்தியா-பாக்.எல்லையில் குண்டுவெடிப்பு; ஐந்து பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் பலி

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 5 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் பலியாகினர்.

பாகிஸ்தானில் உள்ள ஜாம்ப் பகுதி இந்திய-பாகிஸ்தான் எல்லைக் கோட்டுக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்தப் பகுதி இரு நாட்டின் எல்லையில் அமைந்திருப்பதால் அந்நாட்டு இராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று வீரர்கள் எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது பயங்கர சத்தத்துடன் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டு வெடிப்பில் பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 5 வீரர்கள் பலியாகியுள்ளனர். மேலும் ஒரு வீரர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்பு குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதலில் உள்நாட்டில் செயற்பட்டு வரும் பயங்கரவாத அமைப்புகள் ஈடுபட்டதற்கான போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. (7)

# படகு கவிழ்ந்து 30 பேர் பரிதாபம

(பெஷாவர்)

**பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணத்தில் உள்ள சிந்து நதியில் படகு கவிழ்ந்ததால் நீரில் மூழ்கி 30 பேர் உயிரிழந்தனர்.**



பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணம், தோர்கர் மாவட்டத்தின் நல அமேசாய் கிராமத்தில் இருந்து ஹரிபூர் மாவட்டத்தை நோக்கி நேற்று முன்தினம் மாலை சிந்து நதியில் ஒரு பட்கு சென்றது.

அதில் சுமார் 80 பேர் பயணித்தனர். அந்தப் படகு, தர்பெலா பகுதியில் சென்ற போது பாரம் தாங்காமல் ஆற்றில் மூழ்கியது.

இதனால் படகில் இருந்தவர்கள் நீரில் மூழ்கி தத்தளித்தனர். இதுபற்றி தகவல்

# ஆஸியில் ஈழத்துப்பெ

அவுஸ்திரேலியாவில் இலங்கைப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

குயின்ஸ்லாந்தில் வசித்து வந்த 52 வயதான தேவகி என்ற இலங்கைப் பெண்ணே கொலை செய்யப்பட்டார்.

வெளிநாட்டுக்கு விடுமுறையில் சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண்ணே கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பறவை ஒன்று தனது குஞ்சுக்கு உணவு வழங்கிய புகைப்படம் பார்ப்பவர்களை உறைய வைத்துள்ளது. இதற்கான காரணம் என்ன என்பதை பார்ப்போம்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் கடற்கரையில் பறவைகள் பல அழகாக பறந்து கொண்டிருப்பது வழக்கம்.

இதனை அழகாக புகைப்ப டம் எடுக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று கரேன் மேசன் எனும் புகைப்படக் கலைஞர் சென்றிருந்தார்.

வரிசையாக பல பறவைகளின் அசைவுகளை வித்தியாசமாக படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது பிளாக் ஸ்கிம்மர் எனும் பறவை தனது குஞ்சிடம் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

அந்தப் பறவையின் வாயில் உணவு

# ஈராக்கில் பாதுகாப்புப்படையின ஐ.எஸ். தீவிரவாதிகள் 18 பேர்

(பக்தாத்)

ஈராக்கில் பாதுகாப்புப் படை நடத்திய வான்வழித் தாக்குதலில் 18 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர். இந்தத் தாக்குதல்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய ஆகார்ஷத் பகுதியில் பதுங்கு குழி மீது நடந்த வான்வழித் தாக்குதலில் 4 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் எல்லையையொட்டிய கிழக்குப் பகுதியில் நடந்த வான் வழித் தாக்குதலில் 4 ஐ.எஸ். தீவிரவாதிகளும் மொசூல் நகரின் மேற்கே ஈராக் படையினரின் தாக்குதலில் 2 ஐ.எஸ். தீவிரவாதிகளும் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு, சுரங்கப் பகுதியின் மீது நடந்த மற்றொரு வான்வழித் தாக்குதலில்

# வெளிநாடு

## ...ந்து விபத்து; ...பமாக மரணம்!



அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். (7)

## ...துப்பெண் கொலை- கணவர் கைது

...க்கம் கத்திக்குத்தில் முடிவடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பின்னர் கணவரே பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாகவும் குறித்த கொலைக் குற்றச் சாட்டுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், உயிரிழந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (7)

## உலகையே உலுக்கிய பறவை தன் குஞ்சுக்கு உணவு கொடுக்கும் புகைப்படம்

...இருந்துள்ளது. குஞ்சிடம் அதனைக் கொடுக்கும்போது சரியாகப் படம் பிடித்தார்.

பின்னர் அந்த உணவை வாங்கிக் கொண்ட குஞ்சு, கரேனின் புகைப்படத்திற்கு போஸ் கொடுத்ததுபோல் ஒரு நிகழ்வையும் படம் பிடித்தார்.

இந்தப் புகைப்படம் ஏன் அனைவரையும் உலுக்க வேண்டும்? அனைவரின் மனதையும் ஏன் புண்படுத்த வேண்டும்? இதற்கான காரணம், அந்தத் தாய் பறவை தனது குஞ்சுக்குக் கொடுத்தது மீதம் விடப்பட்ட சிகரெட் துண்டு.

புகைப்படத்தை கரேன் திரும்பப் பார்த்தபோதுதான் எங்கோ, யாரோ பாதித் தீயை அணைத்து கீழே போட்ட சிகரெட் துண்டு எனத் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து கரேன் தனது பேஸ்புக் பக்கத்தில், 'இதுபோன்று அலட்சியமாக சிலர் செய்யும் செயல்கள் பறவைகள், விலங்குகளின் வாழ்க்கையை பெரிதும் பாதிக்கின்றன. இப்படி யாரும் இனித் தயவு செய்து செய்யாதீர்கள்' என உருக்கமாக கூறி புகைப்படங்களுடன் பதிவிட்டுள்ளார்.

இந்தப் புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

பலரும் இந்தப் புகைப்படங்களை கனத்த மனதோடு பார்த்து பகிர்ந்து வருகின்றனர். (7)

## ...யினர் தாக்குதல் ... பேர் உயிரிழப்பு

உள்ளே பதுங்கியிருந்த 5 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

சிரிய எல்லையை ஒட்டிய பாலைவனப் பகுதியில் அமெரிக்க கூட்டணி படையின் வான் வழித்தாக்குதலில் 3 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.


சிரியா, ஜோர்தான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய அயல் நாடுகளுடன் எல்லைப் பகுதியை கொண்டிருக்கும் ஈராக்கின் அன்பர் பாலைவனப் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்தும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஈராக் பாதுகாப்புப் படை மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2017ஆம் ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் ஈராக் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தீவிரமான தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் முழுவதும் தோற்கடிக்கப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (7)

## தடுத்து வைத்திருந்த ஆஸி. மாணவனை விடுதலை செய்தது வடகொரியா

### ஆஸி. பிரதமர் அறிவிப்பு



(பியாங்யாங்)

வடகொரியாவில் மாயமான மாணவர் தற்போது பாதுகாப்பாக உள்ளதாக ஆஸி. பிரதமர் ஸ்கொட் மொரிசன் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் வட கொரியாவிற்குச் சென்றிருந்த 29 வயதான **Alek Sigley** என்ற அவுஸ்திரேலிய மாணவர் மாயமானார்.

இந்த நிலையில் பியாங் யாங் உள்ள ஸ்வீடிஷ் தூதரகத்தில் வைத்து இடம்பெற்ற வடகொரிய அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் நிறைவில் மாயமான **Alek Sigley** என்ற அவுஸ்திரேலிய மாணவர் நலமுடன் இருப்பதை வடகொரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மாயமான நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த மாணவனை விடுதலை செய்ய வடகொரிய அரசாங்கம் ஒப்புக்கொண்டதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார்.

இந்த நிலையில் விடுதலை செய்யப்பட்ட மாணவன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சீன தலைநகர் பீஜிங்கை சென்றடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, மாணவரின் விடுதலை குறித்து அக்கறையுடன் செயற்பட்ட அதிகாரிகளுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## பங்களாதேஷ் பிரதமர் மீதான தாக்குதல்! ஒன்பது பேருக்கு மரணதண்டனை விதிப்பு



(டாக்கா)

பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசினா மீதான தாக்குதல் வழக்கில் 9 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பங்களாதேஷில் அவாமி லீக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ஷேக் ஹசினா, 25 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அவரைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. 1994 இல் புகையிரதம் மூலம் நாடு தழுவிய பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, செப்டெம்பர் 23 ஆம் திகதி பாப்னா ஐஷ்வர்டிக்கு வந்தபோது, அவர் பயணம் செய்த புகையிரதப் பெட்டி மீது வெடிகுண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஹசீனா அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

இது தொடர்பாக 135 பேர் மீது புகையிரதத்திணைக்களப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, பாப்னா கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். பின்னர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில், 52 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. அதன்பின்னர் வழக்கில் வாதப்பிரதிவாதங்கள் முடிவடைந்த நிலையில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அப்போது, குற்றம்சாட்டப்பட்டவர்களில் 9 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 25 பேருக்கு ஆயுள் தண்டனையும் 13 பேருக்கு தலா 10 ஆண்டு சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (7)

## 72 ஆண்டுகளுக்குப்பின் திறக்கப்பட்ட பாகிஸ்தான் இந்துக்கோயில்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சியால்கோட்டில் அமைந்துள்ள மிகப் பழைமையான இந்துக் கோயில் சுமார் 72 ஆண்டுகளுக்குப் பிறகு திறக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மையினமான இந்து மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினைத் தொடர்ந்தே ஷவாலா தீஜா சிங் எனும் இந்துக் கோயில் திறக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கோயிலை மறுசீரமைப்பதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இந்து கடவுள் சிலைகள் கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு மூடப்பட்ட குறித்த கோயில், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் உத்தரவின் பேரில் தற்போது திறக்கப்பட்டுள்ளது. (7)

# தமிழினத்தின் விடுதலைக்காக போராடிய புலிகளைத் தரக்குறைவாக பேச முடியாது

## வியாழேந்திரன் சீற்றத்துடன் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**தமிழினத்தின் விடுதலையை மாத்திரம் உயிராக நினைத்துப் போராடிய விடுதலைப்புலிகளுடன் போதைப் பொருளைத் தொடர்புபடுத்தி ஜனாதிபதியோ, ஏன் வேறு யாருமோ தரக்குறைவாகப் பேச முடியாது என நாடாளு மன்ற உறுப்பினர் வியாழேந்திரன சீற்றமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவ்வாறு பேசுவது ஒட்டு மொத்தத் தமிழினத்தையே அவமதிக்கும் செயலாகவே நான் பார்க்கிறேன் என மேலும் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே தெரிவித்துள்ளார்.

மேலும் அறிக்கையில் இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உயிரைத் துச்சமாக மதித்து, கழுத்திலே நஞ்சுக் குப்பியை அணிந்து கொண்டு போராடிய விடுதலைப்புலிகள் வாயில் புகைத்தலையோ! மதுவையோ! விளையாட்டாகவும் வைத்துப் பார்க்காதவர்கள்.

அவர்கள் கனவிலும் போதை பற்றி நினைத்துப் பார்க்காதவர்கள். இன விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டவர்கள். அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சாதாரண போதைப் பொருள் பாவனைக்கே இடமளிக்காதவர்கள். அவர்கள் போதைப் பொருள் விற்பனை செய்தார்கள் என்ற கருத்தை துளியளவும் ஏற்க முடியாது.

பலரது புலம்பெயர் உறவுகளின் உழைப்பும் அது மாத்திரமல்ல விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவையான உணவு சார்ந்த பொருட்கள் உட்பட பலவற்றை தாங்களே உற்பத்தி செய்து தயாரித்தும் பெற்றுக் கொண்டார்கள்.

விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் போதைப் பாவனை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. தவறி யாராவது சாதாரண போதைப் பொருள் பாவித்தாலும் அவர்களும் கட்டுப்படுத்தப்பட்டார்கள்.

எனவே ஜனாதிபதி மட்டுமல்ல யாருமே விடுதலைப் புலிகள் மீது போதை என்ற சொல்லையே பயன்படுத்த முடியாது என மேலும் தெரிவித்தார். (7)

# ‘சோபா’வால் மக்கள் மத்தியில் வீண் அச்சம் தோற்றுவிக்கப்படுகிறது

## மத்தும பண்டார கூறுகிறார்



கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது அமெரிக்காவுடன் பல ஒப்பந்தங்கள் செய்துள்ளார். அது பற்றியாரும்பேசவில்லை. ஆனால் நாட்டுக்கு பாதகமில்லாத, வெறும் பேச்சுவார்த்தை மட்டத்தில் மட்டுமே காணப்படும் சோபா ஒப்பந்தம் குறித்து மக்கள் மத்தியில் வீண் அச்சங்கள் தோற்றுவிக்கப் படுவதாக பொதுநிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சோபா ஒப்பந்தம் இன்னும் கைசாத்திடப்படவில்லை. ஆனால் எதிர்க்கட்சியினர் அது குறித்து பொய்ப் பிரசாரங்களையே முன்னெடுக்கின்றனர். அவர்கள் கூறுவதைக் கேட்டு மக்கள் அச்சமடையச் தேவையில்லை. அத்தோடு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன வெகுவிரைவில் இந்த ஒப்பந்தம் குறித்து தெளிவுபடுத்துவார் என மேலும் அவர் தெரிவித்தார். (7)

# திருமலையில் ஆயுதங்கள் மீட்பு





திருகோணமலை சேரு வில கந்தளாய் பிரதான வீதி யில் களு பாலமருகில் சில ஆயுதங்களை நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிர டைப்படையினர் கண்டு பிடித்துள்ளனர். இதில் ரி- 56 துப்பாக்கி தோட்டாக்கள் 2292, எல் எ ஜி, எம்9, ரி-56 துப்பாக்கிகள் போன் ற வும் கைப்பற்றப்பட்டன. பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலே இப்பொருட்களை கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் கைப்பற்றிய ஆயுதங்கள் சேருநுவர பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து மேலதிக விசா ரணைகளை சேருநுவர பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (7)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## பிரம்ம ஞானம்

அந்தக் காலத்திலே வசிஷ்டர் என்று ஒரு முனிவர் இருந்தார். கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அவர் மற்றவர்கள் போல் சாதாரண முனிவர் இல்லை. பிரம்ம ரிஷி! ஒருவருக்கு பிரம்மஞானம் வந்து விட்டது என்றால் அதன் பின் தான் அவரை பிரம்மரிஷி என்று சொல்லுவார்கள்.

அந்த ஞானம் அவ்வளவு சுலபமாக எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. அதை அடைவதற்கு விசுவாமித்திரரே என்ன பாடுபட்டிருக்கின்றார் தெரியுமா? நானும் பிரம்ம ஞானத்தைப் பெற வேண்டும். என்னையும் எல்லோரும் பிரம்மரிஷி என்று மதிக்க வேண்டும்.

இப்படி ஒரு ஆசை விசுவாமித்திரருக்கு! சரி அதற்கு என்ன வழி என்று யோசித்தார். நேராகக் காட்டிற்குப் போனார். கடுமையாக தவம் செய்ய ஒரு நாள் அவர் தான் பிரம்மஞானம் அடைந்தார் என்று நினைத்தார்.

உடனே அவர் வசிஷ்டரிடம் போய் அவரை வணங்க வேண்டும் என்று முடிவு செய்தார். அவரிடம் போனால் தனக்கு பிரம்மஞானம் வந்து விட்டதா? இல்லையா? என்பதை புரிந்து கொள்ளலாம். எப்படித் தெரியுமா? அதற்கு ஒரு வழி இருக்கின்றது.

அந்தக் காலத்திலே எல்லாம் ஒருவரை ஒருவர் வணங்குவதிலே சில சம்பிரதாயங்கள் உண்டு. ஒரு பிரம்மரிஷியை இன்னொருத்தர் வணங்குகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். வணங்க வந்தவர் தனக்கு சமனாக பிரம்மஞானம் அடைந்தவராக இருந்தால் பிரம்மரிஷி பதிலுக்கு அவரை வணங்கலாம். அப்படி இல்லை என்றால்...

பிரம்மரிஷி தமது கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்ய வேண்டும். அவ்வளவுதான். இதை மனதிலே வைத்துக் கொண்டு தான் விசுவாமித்திரர் வசிஷ்டர் இருக்கின்ற இடத்தை தேடிக் கொண்டு போனார்.

அவரைப் போய் வணங்குவோம். அவர் பதிலுக்கு நம்மை வணங்கினால் நமக்கு பிரம்மஞானம் வந்து விட்டது என்பது உறுதியாகி விடும் என்று நினைத்தார்.

வசிஷ்டர் ஆச்சிரமத்திற்கு வந்து சேர்ந்தார் விசுவாமித்திரர். அவரை வணங்கினார். ஆனால் அவர் பதிலுக்கு இவரை வணங்கவில்லை. கையைத் தூக்கி ஆசீர்வாதம் செய்தார்.

விசுவாமித்திரருக்கு கோபம் வந்து விட்டது. இவ்வளவு கடுமையாகத் தவம் செய்தோம். அவர் நம்மை பிரம்மரிஷியாக ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கின்றாரே! என்ற கோபம். மறுபடியும் திரும்பி வந்து தவம் செய்ய ஆரம்பித்தார். ஒரு நாள் திடீரென்று அவருடைய இஷ்ட தெய்வம் முன்னால் வந்து காட்சி கொடுத்தது.

விசுவாமித்திரா! நீ போய் வசிஷ்டரை வணங்கு! அவர் பதிலுக்கு உன்னை வணங்கவில்லை என்றால் உடனே அவர் தலை சுக்கு நூறாக வெடித்திட வேண்டும் என்று சாபம் கொடுத்து விடு! என்று சொல்லி விட்டு மறைந்து விட்டது. உடனே விசுவாமித்திரர் புறப்பட்டு போனார். மறுபடியும் பழைய மாதிரியே கையைத் தூக்கித் தான் ஆசீர்வாதம் செய்தார்.

விசுவாமித்திரருக்கு கடுமையான கோபம். ரஜோ குணத்தினுடைய வேகம் அதிகமாகி விட்டது. இவ்வளவு தவம் செய்தும் என்னை அங்கீக்ரிக்காத உங்களையும் உங்களைச் சேர்ந்தவர்களையும் நான் என்ன செய்கின்றேன் பார் என்று பொங்கி எழுந்தார்.

ஆனால் அந்த நேரத்திலே அவரிடம் திடீரென்று ஒரு மாற்றம். இவ்வளவு காலமும் அவர் செய்த தவம் எல்லாம் சேர்ந்து நல்ல எண்ணங்கள் உண்டாகியதாம். அவர் யோசிக்கின்றார். சரி இவர் எங்களை பிரம்மஞானியாக ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் என்ன? அதற்காக நான் ஏன் இவ்வளவு கோபப்பட வேண்டும். கோபத்தாலே புத்தி தடுமாறி சாபம் கொடுக்க இருந்தேனே. கோபம், பொறாமை அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்யும்.

இதுபோல் நினைப்பெல்லாம் சராசரி மனிதனுக்கு வரலாம். இவ்வளவு காலம் தவம் செய்த எனக்கு வரலாமா? என் மனதிலே இன்னமும் இந்த கெட்ட எண்ணங்கள் இருக்கின்றதே! அப்படி இருக்கின்ற போது பிரம்மஞானம் எனக்கு வந்து விட்டது என்று எப்படி சொல்ல முடியும் என்று நினைத்தார்.

உண்மையான தவம் என்றால் என்ன? மற்றவர்களுக்குக் கெடுதல் செய்கின்ற எண்ணமே வரக்கூடாது இல்லையா? நான் எவ்வளவு மோசமாகிவிட்டேன். என்னிடம் இருக்கின்ற அதே ஆத்மா தானே எல்லா உயிர்களிடமும் இருக்கின்றது என்று நினைத்தார்.


வெட்கத்துடன் தலை குனிந்தபடி திரும்பி நடக்க ஆரம்பித்தார் விசுவாமித்திரர். கொஞ்சம் நில்லுங்கள் என்று ஒரு குரல். அவர் திரும்பிப் பார்த்தார். பின்னால் வசிஷ்டர் வந்து கொண்டிருந்தார்.

ஏன் என்பது போல் இவர் அவரைப் பார்த்தார். கொஞ்சம் நில்லுங்கள். நான் உங்களை வணங்க வேண்டாமா? உங்களை வணங்கி நான் உங்கள் வணக்கத்தை ஏற்றுக்கொள்கின்றேன். உங்களுக்கு பிரம்மஞானம் வந்து விட்டது என்றார். வசிஷ்டர் தன் வாயாலே பிரம்மரிஷி என்று சொல்லிவிட்டார். பின்னர் என்ன வேண்டும்? அந்தக் காலத்திலே வசிஷ்டர் வாயாலேயே பிரம்மரிஷி என்று அவர் பட்டம் வாங்கினது போல் இந்தக் காலத்திலேயும் கடுமையான முயற்சிகள் செய்து நானும் வாங்கி விட்டேன் என்றார் ஒரு குடும்பஸ்தர்.

வசிஷ்டர் யார்? என்று கேட்டேன்.

அப்படி அவர்கள் வாயாலே என்ன தான் சொல்லி விட்டார்கள்? என்றேன். ரொம்ப நாட்களுக்குப்பின் இன்றைக்குத்தான் சொன்னார்கள் என்றார். என்ன சொன்னார்கள்? அதை முதலில் சொல்லுங்கள் என்றேன். சாம்பாரிலே நான் போட்ட உப்பு சரியாக இருக்கு என்று சொல்லி விட்டார்கள் என்றார்.

# "சுற்றுலாப்பயணம் மேற்கொள்ள சிறந்த நாடு" இழப்பிலிருந்து மீண்ட எமக்கு கிடைத்த கௌரவம்



## பிரதமர் ரணில் பெருமிதம்

(கொழும்பு)

இலங்கை உலகில் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள சிறந்த நாடு என உலக புகழ்பெற்ற லோன்லி பிளேனட் சுற்றுலா சஞ்சிகை மீண்டும் அறிவித்துள்ளமை நாட்டுக்கு கிடைத்த கௌரவம் எனவும் அந்த கௌரவத்தை பெற்றுக் கொள்ள பாடுபட்ட சுற்றுலாத் துறை சார்ந்த அனைத்து பெரிய மற்றும் சிறிய சுற்றுலாத்துறை பங்காளிகளுக்கு நன்றிகளை கூறுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் நேற்று முன்தினம் விசேட உரை ஒன்றை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். சுற்றுலாத்துறையை மீண்டும் மேம்படுத்த தமது அரசாங்கம் முழுமையான உதவிகளையும் அனுசரணைகளையும் வழங்கும் எனத் தெரிவித்த பிரதமர் இலங்கை சுற்றுலாப் பயணிகள் செல்ல சிறந்த நாடு என லோன்லி பிளேனட் சஞ்சிகை இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அறிவித்திருந்தது.

எனினும் உயிர்த்த ஞாயிற்றுக் கிழமை நடந்த தாக்குதலையடுத்து. இலங்கையில் இருந்த சுற்றுலாப் பயணிகள் நாட்டை விட்டு வெளியேறினர். இதனால், இலங்கைக்கு வழங்கப்பட்ட இடம் இல்லாமல் போனது பற்றி அனைவரும் சிந்தித்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் அந்த சஞ்சிகை இலங்கை சுற்றுலாப் பயணத்திற்கு சிறந்த நாடு என மீண்டும் அறிவித்துள்ளமை நாம் பெருமை கொள்ளும் விடயமாகும் எனவும் தெரிவித்தார்.

பல பிரச்சினைகள் இருந்தாலும் இலங்கை மக்கள் அவற்றை பொருட்படுத்தாது, சிரித்த முகத்துடன் தம்மை வரவேற்றதாக அந்த சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது. இலங்கை முழுவதும் தாம் பயணம் செய்ததாகவும் இலங்கையில் பயணம் செய்வதில் எந்த பிரச்சினையும் தற்போது இல்லை எனவும் அந்த சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கையர்களான எமக்கு பெரிய தைரியம் கிடைத்துள்ளது. சுற்றுலாத்துறை மீண்டும் கட்டியெழுப்ப எமது அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இப்படியான பல நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (7)

# குருநாகல் போதனா வைத்தியசாலையில் முதன்முறையாக சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை

(குருநாகல்)

குருநாகல் போதனா வைத்தியசாலையில் முதல் முறையாக சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சரத் வீரபண்டார தகவல் வெளியிட்டுள்ளார்.

குறித்த அறுவைச்சிகிச்சையை நடத்திய வைத்தியர்கள் குழுவுடன் இணைந்து வைத்தியசாலையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூளை செயலிழந்த பிள்ளை ஒன்றின் இரண்டு சிறுநீரகங்களையும் சிறுநீரக பாதிப்புள்ள ஒருவருக்கு மாற்றியதாகவும் அது வைத்தியசாலையின் வரலாற்றில் முக்கியமான அறுவைச் சிகிச்சை என்று அவர் தெரிவித்தார். (7)

# மின்சாரப் பிரச்சினைக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு-ரவி



(கொழும்பு)

மின்சாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தை பொறியியலாளர்களுடன் மேற்கொள்ளப்படும் எனவும் பாவனையாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் துரித தீர்வை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி மின்சாரத்துறையுடன் சம்பந்தப்பட்ட பல அமைப்புக்கள் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் எந்தவகையிலும் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இலங்கை வங்கி ஊழியர்கள் திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்



இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரால் திருகோணமலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை ஒன்றுகூடிய ஊழியர்கள், ஊழியர் நலன்புரியின் மீது வரிஅறவிடுவதனை உடன் நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவு வழுக்களை திருத்துக, ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு ஓய்வூதியத்தினை ஏற்படுத்துக மற்றும் இல்லாமல் ஆக்கப்பட்ட ஓய்வூதியத்தினை திருத்துக போன்ற பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வங்கி ஊழியர்கள் கலந்துகொண்டுள்ளதுடன், இதன்போது பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. (7)




## வரம் தருவாள் அம்மா...

அலைகடலின் ஓரத்திலே அருளாட்சி புரிந்து வரும்
அன்னை நாக பூஷணியே
அழுது தொழுது வரும் அடியவர்களை
அன்புக் கரம் நீட்டி அபயமளிக்கும் அன்னையே
உன் பாதம் பணிகின்றோம் சீரான வாழ்வு தரமாட்டாயா...

க.மலர்,
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

## இன்னல்கள் யாவும் தீர்ப்பாய்

அலைகடல் என திரண்டிடும் பக்தர்களின் நடுவே
ஆர்ப்பரிக்கும் கடல் அலையின் மத்தியில்
வீற்றிருக்கும் எங்களது அன்பான அன்னையே
நயினை நாகபூஷணிதாயே
இன்னல்கள் யாவும் தீர்த்தருள்வாய் தாயே
ஈன்றிடும் அன்னையவள் நீயே தாயே
உலகத்தவர் பணிந்திடும் உமையவள் நீயே
நயினை என்னும் பதியில் வீற்றிருக்கும் பூஷணியே
நாளெல்லாம் உமை பாடா வரம் தருவாய் தாயே

நவாலியூர்,
ம.லலிதாம்பிகை.

## அருள் புரிவாய் நாகபூஷணி

நயினையிலே கோயில் கொண்ட நாகபூஷணி
எமக்கு நல்லருளை தந்திடுவாய் நாகபூஷணி
துன்பமெல்லாம் போக்கிடுவாய் நாகபூஷணி
எமக்கு துணை புரிந்து காத்திடுவாய் நாகபூஷணி
அலை கடலைக் கடந்தல்லோ நாகபூஷணி
மக்கள் அலை அலையால் வருகின்றோம் நாகபூஷணி

தீங்கொன்றும் நேராமல் நாகபூஷணி
உந்தன் திருவருளால் காத்திடுவாய் நாகபூஷணி
தேடி வரும் மக்களுக்காய் நாகபூஷணி
எங்கள் தேசம் காக்க வேண்டும் நாகபூஷணி
எங்கள் சமயம் வளர வேண்டும் நாகபூஷணி
அதற்கு உந்தன் அருள் தேவையம்மா நாகபூஷணி
அதை தந்து என்றும் அருள் புரிவாய் நாகபூஷணி

க.சூரியகுமாரி,
V.CC வீதி,
தந்தை செல்வாபுரம்,
தெல்லிப்பழை.

## சரணம் அம்மா

உன்னைத் தொழுதே உயிர்கள் வாழ்ந்திடவே
உலக நாயகியே எழுந்தருளி வருகவே
கடல் சூழ் தீவின் மத்தியிலே அமர்ந்தே
கருணையுடன் அருள் புரிபவளே எழுகவே!

நாகபூஷணி என்றும் நல்நாமம் கொண்ட
நாளும் அருளும் தாயே சரணமம்மா
நலிவுற்றோர் வாழ்வதனை வளமாக்கி புகழ்பெற்றவளே
நாடும் பக்தர்கள் குறைகளை தீர்ப்பவளே.

திசை நான்கும் உன்னை போற்றிடவே
திக்கற்றவருக்கு திசை காட்டுபவளே போற்றி
திருவிழாக் கோலம் பூண்ட நன்னாளில்
திருவடியில் சரணம் அடைகிறோம் அருளுமம்மா.

அரியாலை,
கு. யசிதீபன்


# மக்களின் குடியிருப்பு முறையில் ஏற்பட்ட மாற்றமும் குடியிருப்பு நிர்மாணிக்க அனுமதி பெறும் முறையும்

05


கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



## பாதை முகப்பு (Road Frontage)




### வீட்டுக் காணித்துண்டுகளுக்கான பாதையின் அகலம்-நகர அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் படி




காணித்துண்டுகள் 4 அல்லது 4 இலும் குறைவு பாதையின் அகலம் - 3 மீற்றர்

காணித்துண்டுகள் 8 அல்லது 8 இலும் குறைவு பாதையின் அகலம் - 4.5 மீற்றர்

காணித்துண்டுகள் 20 அல்லது 20 இலும் குறைவு பாதையின் அகலம் - 6 மீற்றர்

### கட்டட நிபுணர்களின் சேவை

பெரிய நகரங்களில் கட்டடங்கள் கட்டும்போது கட்டடங்களின் வடிவமைப்பு, வரைபடங்கள் தயாரிப்பு மற்றும் மேற்பார்வை போன்றவற்றுக்கு உரிய நிபுணர்களின் சேவை பெறப்பட வேண்டும் என்பது கட்டாயமானதாகும். அதுமட்டுமன்றி இவ்வாறான உயர்தொழில் நிபுணர்களும் (பட்டயப் பொறியியலாளர், நகரத் திட்டமிடுநர் -Town Planner, (பட்டயக் கட்டடக்கலைஞர், உத்தரவுபெற்ற நில அளவையாளர் போன்றோர்) அத்தகைய சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

### நிபுணர்களின் கடமைகள்

அனுமதிக்காக கொடுக்கப்படும் கட்டட திட்ட வரைபடம் திருத்தமானதாகவும் சரியானதாகவும் இருத்தல் வேண்டும். அத் திட்ட வரைபடம் அன்றைய சட்டதிட்டங்களுக்கு ஏற்ப வரையப்பட்டது என்பதற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும். அவை அனுமதிக்காக உள்ளூராட்சி மன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அவர்கள் சகல கட்டட மற்றும் அபிவிருத்தி வேலைகளை மேற்பார்வை செய்யவேண்டும். நடைபெறும் வேலைகள் சம்பந்தமான முன்னேற்றங்கள் பற்றி உரிய நிறுவனங்களுக்கு / இடங்களுக்கு அறிவித்தல் வேண்டும். வேலை முடிவுற்றதும் உரிய நிறுவனத்திடமிருந்து/ உள்ளூராட்சி மன்றத்திடமிருந்து இசைவுச் சான்றிதழ் **(certificate of conformity)** பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### பிரதேச சபை மட்டத்தில் கட்டட திட்டங்களை (Building Plan) அங்கீகரித்தல்

பிரதேச சபையினாலேயே அதனது அதிகார பிரதேசத்தில் நடக்கின்ற அனைத்து நிர்மாண நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகிறது. அதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுகின்ற அனைத்து நபர்களும் அப் பிரதேச சபையிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனுமதி பெறுவதற்கு முதலில் கட்டட விண்ணப்பப் படிவமொன்றை பணம் செலுத்தி பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் அங்கீகரிக்கப் படுவதற்குள்ள கட்டடத்தின் வரைபடம், அதன் 3 நிழற் பிரதிகள், அங்கீகரிக்கப்பட்ட காணி வரைபடம், காணி உறுதி என்பவற்றையும் வழங்கி கட்டடத்தின் சதுர அடி அளவுக்கு ஏற்ப (இது தொடர்பான விபரங்கள் விண்ணப் பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்) பணம் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் சபையின் தொழில்நுட்ப அதிகாரி / பொதுச் சுகாதார பரிசோதகர் குறித்த இடத்தைப் பரிசோதிப்பார். அத்துடன் அவர்களின் பரிந்துரையுடன் அக் கோவைகள் திட்டமிடல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அனுமதி வழங்கப்படும்.

**பிரதேச சபை மட்டத்தில் கட்டடம் நிர்மாணிப்பதற்கான அனுமதி பெறுவதற்கு விண்ணப்பப்படிவத்துடன் அங்கீகரிக்கப்படுவதற்குள்ள கட்டடத்தின் வரைபடம், அதன் 3 நிழற் பிரதிகள், அங்கீகரிக்கப்பட்ட காணி வரைபடம், காணி உறுதி என்பவற்றையும் வழங்கி கட்டடத்தின் சதுர அடி அளவுக்கு ஏற்ப பணம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் சபையின் தொழில்நுட்ப அதிகாரி/ பொதுச் சுகாதார பரிசோதகர் குறித்த இடத்தைப் பரிசோதிப்பார். அதன் பின்னர் அனுமதி வழங்கப்படும்.**

**ஆனால் நகரசபை மற்றும் மாநகர சபை போன்ற பிரதேசத்தில் கட்டடம் நிர்மாணிப்பதாயின் பல நிறுவனங்களிடமிருந்து இணக்கப்பாட்டுச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும்.**

அங்கீகரித்த முத்திரையிடப்பட்டதன் பின்னர் அங்கீகரித்த வரைபடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்கள் அவ் விண்ணப்பப்படிவத்தில் பார்த்துதெரிந்துகொள்ளலாம்.


பல பிரதேச சபைகளின் அதிகார பிரதேசங்கள் 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் அச் சட்ட திட்டங்களின் பிரகாரம் நிர்மாணப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபையால் சில அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கு வழங்கப் பட்டிருந்தாலும் அவை 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீளப்பெறப்பட்டு அவை மாகாண அல்லது மாவட்ட மட்டத்தில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீளப் பெற்றதற்கு எதிராக வடக்கு மாகாண சபையின் 84 ஆவது கூட்டத் தொடரில் அப் போதைய வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணை அச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அக் கூட்டுத்தொடரில் முதலமைச்சர் தெரிவித்ததாவது, நகர் அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட 01.03.85 ஆம் ஆண்டு 01ஆம் இலக்க சுற்றுநிருபம்மூலம்உள்ளூராட்சிசபைகளுக்குக்கையளிக் கப்பட்ட தத்துவங்கள் பாரிய நகர மற்றும் மேற்கத்தேய அபிவிருத்தி அமைச்சின் பணிப்பின் பெயரில் 01.02.2017 இல் இருந்து மீளப் பெறப்படுவதாக மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

# கல்வி ஏன் கசக்கிறது



### 🕮 கற்றல் இயல்பானது

அண்ணளவாக பத்து இலட்சம் வருடங்களுக்கு முன் பக்றீறியா போன்ற ஒரு கல உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்தே கற்றல் செயற்பாடானது ஆரம்பித்து விட்டது. கற்றல் என்பது "நடத்தையில் ஏற்படும் நிரந்த ரமாற்றம்" என்பதே ஆகும். மேற்குறித்த ஒரு கல உயிரினங்கள் தப்பிப்பிழைத்து உயிர் வாழவும் இனம் பெருகவும் ஏற்றதான சாதகமான நிரந்தர நடத்தை மாற்றங்களுக்கு உட்பட்டன. கற்றல் செயற்பாடானது இயற்கையானது இயல்பானது.

அண்ணளவாக இரண்டு இலட்சம் வருடங்களுக்கு முன் தோன்றிய ஆதிமனித இனமும் இதற்கு விதிவிலக்கல்ல. கால ஓட்டத்திலே கற்றலில் பிரதான பங்கு வகிக்கின்ற நரம்புத்தொகுதி, குறிப்பாக மூளையானது, ஏனைய உயிரினங்களுடன் ஒப்பிடுகையில் மனித இனத்திலே சிறப்பாக விருத்தியடைந்தது.

இதன் விளைவால், மனித இனம் தப்பிப்பிழைத்து உயிர்வாழுதல் இனம் பெருகுதலிற்கு அப்பால் வேட்டையாடி உண்ணவும் நெருப்பைக் கட்டுப்படுத்தவும் கற்றுக் கொண்டனர் (நிரந்தர நடத்தை மாற்றம்).

இதன் பின்னர், பசுமைப் புரட்சி மற்றும் கைத்தொழிற் புரட்சிகள் நடந்தேறின. இத்தகைய சந்தர்ப்பங்களிலும் மனிதன் அதீத நடந்தை மாற்றங்களுக்கு உட்பட்டான் (கற்றுக்கொண்டான்). இதனையே நாகரிக வளர்ச்சி எனலாம்.

### 🕮 கட்டமைக்கப்பட்ட கற்றல்

இதன்போது அறிவை, ஆற்றலை சக மனிதர்களுக்கு (குறிப்பாக எதிர்கால சந்ததியினருக்கு) வழங்கும் சிந்தனையுடன் கட்டமைக்கப்பட்ட **(structured)** கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகின. இங்குதான் இயல்பான, இயற்கையான கற்றல் ஒரு வரையறைக்குட்படுத்தப்படுகிறது.

படிப்படியாக வளர்ச்சியடைந்த இக்கற்றல் செயற்பாடானது, முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழிற் கல்வி எனப் பல படிமுறைகளினூடாக மாணவர்களில் நடத்தை மாற்றங்களை (கற்றல்) ஏற்படுத்த முயல்கின்றது.

### 🕮 கல்வியின் நோக்கங்கள்

அரசு அல்லது கொள்கை வகுப்பாளர்கள் மேற்படி கட்டமைக்கப்பட்ட கல்வியினை பின்வரும் நோக்கங்களுக்காக நடைமுறைப்படுத்துகின்றனர்.

1. பொருளாதார வளர்ச்சி
2. சமூக வளர்ச்சி
3. தனிநபர் வளர்ச்சி
4. கலைபண்பாட்டுவிழுமியவளர்ச்சி

ஆனால், துரதிர்ஷ்ட வசமாக மேற்படி வளர்ச்சிகளினூடாகக் கல்வி (கற்றல்) வளர்ச்சியை அளவிடுவதற்குப் பதில் பரீட்சைப் பெறுபேறுகளினூடாக அளவிடும் முறையே எம்மிடம் காணப்படுகிறது.

### 🕮 வடமாகாணத்தில் கல்வியின் நிலை

இத்தகைய சந்தர்ப்பத்திலே எமது வடமாகாணக் கல்வி நிலை பற்றி சற்றே உற்று நோக்குதல் சாலச்சிறந்தது.

### 4.1 பொருளாதார வளர்ச்சி

மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி (2017), ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணமானது தனிநபர் வருமானத்தில் 5 ஆவது இடத்திலும், வறுமையில் 2ஆவது இடத்திலும் காணப்படுகின்றது. பெரும்பாலும் அரச உத்தியோகங்களை நம்பியிருக்கின்ற நிலைமையும், வெளிநாட்டு உறவினர்களின் பணத்தில் தங்கிருக்கின்றமையும், அதிகம் கடின உழைப்பின்றி குறுகிய காலத்தில் பணக்காரராகி விடவேண்டும் என்ற மனோ நிலையுமே எம்மிடையே விரவிக் காணப்படுகின் றது. சற்றே சிந்திப்போம், கற்றலின் நோக்கம் நிறைவேறியுள்ளதா?

### 4.2 சமூக வளர்ச்சி

துரதிர்ஷ்டவசமான மூன்று சகாப்த யுத்தமானது எமது சமூகத்தைச் சின்னாபின்னமாக்கியுள்ளது. சமூகப்பொறுப்புணர்வு, மனித விழுமியங்கள் அருகி வருவதோடு சுயநலப்போக்கு தவிர்க்க முடியாத வாறு அதிகரித்துச் செல்கின்றது. சுயநல மற்று சமூகத்தை நல்வழிப்படுத்தக்கூடிய தலை வர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. எனவே, கற்றலின் நோக்கம் நிறைவேறி யுள்ளதா?

### 4.3 தனிநபர் வளர்ச்சி

பட்டங்களைப் பெற்றிருக்கிறோமே தவிர உண்மையான பட்டறிவைப் பெற்றிருக்கிறோமா? என்பது கேள்விக்குறியே. சமூகப் பொறுப்புணர்வு, மென்திறன்கள் மற்றும் மனித விழுமியங்களைக் காத்தல் என்பவற்றில் பொதுவாக எதிர்மறையான நடத்தை மாற்றமே (கற்றல்) அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. ஆகவே, கற்றலின் நோக்கம் நிறைவேறியுள்ளதா?

### 4.4 கலை பண்பாட்டு விழுமிய வளர்ச்சி

கலை பண்பாட்டிற்குப் பெயர்போனது எமது மாகாணம். ஆனால், இன்றைய நிலை? சரியாக வழிநடத்தப்படாத இளைஞர் சமுதாயம் சினிமா மற்றும் போதையின் தாக்கத்தில் சிக்கித் தவிக்கிறது. பண்பாடு மற்றும் மனித விழுமியங்களைக் காக்க அரும்பாடுபட வேண்டியுள்ளது. பண்பாடு பண்பட்ட மனித இதயத்திலேயே காணப்படும். எமது கற்றல் செயற்பாடு மனித இதயங்களைப் பண்படுத்தியுள்ளதா? கற்றலின் நோக்கம் நிறைவேறியுள்ளதா?

### 4.5 கல்விப் பெறுபேறுகள்

முன்னொரு காலத்தில் கல்விப் பெறுபேறுகளில் அனைவராலும் வியந்து பார்க்கப்பட்டது வடமாகாணம்; அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் நிரப்பியது வடமாகாணம். இது வரலாறு. ஆனால், வடமாகாணத்தின் தற்போதைய பரீட்சைப் பெறுபேறுகளை ஆராய்ந்து பார்ப்போமேயானால் மகிழ்வு தருவதாக இல்லை.


க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் (பல்கலைக்கழகத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்டவர்கள் அல்லர்). வீதப்படி 2016 ஆம்ஆண்டு 5 ஆம் இடத்திலிருந்து 2017 ஆம் ஆண்டு 3 ஆம் நிலைக்கு வடமாகாணம் முன்னேறியிருப்பது ஆறுதல் தருவதாக உள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் கவலை தருவனவாக உள்ளன. பாடசாலை மூலம் முதலாவது தடவையில் தோற்றிய மாணவர்களில் 2016 ஆம் 2017ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரம் கற்பதற்குத் தகுதியானவர்களின் வீதத்தில் வடமாகாகணம் கடை நிலையில் (9 ஆவது) உள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மொத்தமாக 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியெய்திய வீதத்தில் 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளில் வட மாகாணம் 8 ஆவது நிலையில் உள்ளது.

மேற்குறித்த அனைத்து சுய பார்வைகளும் ஒன்றையே சுட்டி நிற்கின்றது. அதாவது, எமது வடமாகாண மாணவர்களுக்கு கற்றல் கசக்கிறது. (க.பொ.த.உயர்தர மாணவர்களை ஓரளவு விதி விலக்காகக் கொள்ளலாம்). விரும்பிக் கற்றும் ஏதுநிலை காணப்படவில்லை என்பதேயாகும்.

எனவே, கல்வியினூடாக எமது சமுதாயத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு கல்வி கசப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இங்கு பாடசாலைக் கற்றலே கருத்தில் எடுக்கப்படுகிறது.




### 🕮 கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

மாணவர்களின் கற்றல் செயற்பாடானது பின்வரும் பிரதான காரணிகளில் தங்கியுள்ளது எனலாம்.

1. மாணவனின் தனித்துவம்
2. ஆசிரியர்களின் வகிபாகம்
3. பெற்றோரின் வகிபாகம்
4. பாசாலைச் சூழமைவு

மேற்குறித்த காரணிகள் ஒவ்வொன்றும் கற்றலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன எனத் தனித்தனியாக ஆராய்வோம்.

### 5.1 மாணவனின் தனித் துவம்

### 5.1.1 கற்றலின் நோக்கப்புரியாமை

தமது எதிர்காலம் பற்றிய தொலை நோக்கு **(vision)** பெரும்பாலான மாணவர்களுக்கு இருப்பதில்லை. அத்தொலை நோக்கை அடைவதற்கு கல்வி உதவும் என்பதை உணர்வதில்லை. தமது மகிழ்வான எதிர்காலத்தை நோக்கிய தமது **DNA** ஐ மாணவர்கள் அறிந்திருப்பதில்லை. மாணவர்கள் தங்களது விருப்பங்களை **(Desire)** அறிந்தவர்களாகவும் தங்களது திறமைகளை/சொத்துக்களை **(Assets)** அறிந்தவர்களாகவும் இருப்பின் அவற்றின் மூலம் சமூகத்தின் எத்தகைய தேவைகளை **(Needs)** நிறைவேற்ற முடியும் என அறிந்திருத்தல் வேண்டும். சமுதாயத் தேவைகளை நிறைவேற்றுதல் மூலமே பணம் சம்பாதிக்க முடியும். ஆத்ம திருப்தியினை அடைய முடியும். மாணவனின் விருப்பங்களுக்கேற்ற கல்வியும் தொழிலும் மனமகிழ்வைத் தரும். அதேவேளை, தனது திறமைகளுக்கேற்ற கல்வியும் தொழிலும் திறமையை வெளிப்படுத்த உயர் நிலையை அடைய உதவும்.

தனது விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ற கல்வி சமூகத்தின் தேவையை நிறைவு செய்யின் பொருளாதாரத்தினை ஈட்ட உதவுவதோடு ஆத்ம திருப்தியையும் கொடுக்கும். இவ்வாறு கற்றலின் நோக்கத்தினைப் புரிந்து கற்றால் கற்றல் இனிக்கும். அல்லது கசக்கவே செய்யும்.

### 5.1.2 சரியான தொழில் வழிகாட்டல் ஆலோசனை இன்மை

மேற்குறித்தவாறு மாணவர்கள் தமது எதிர்காலத்தைத் திட்டமிடக்கூடிய வகையில் ஆலோசனை வழங்கக்கூடிய வழிப்படுத்தக்கூடிய தொழில் வழிகாட்டல் பிரிவு பாடசாலைகளில் இயங்க முடியாமை துரதிர்ஷ்டவசமானதே. தனது விருப்பத்திற்கேற்ப,திறமைகளுக்கேற்ப கற்க வழிகாட்டப்படாத மாணவனுக்குக் கல்வி கசக்கவே செய்யும்.

### 5.1.3 சரியான வழிகாட்டல் இன்மை

பருவ வளர்ச்சியில் மாணவப் பருவம் இயற்கையாகவே கற்கின்ற பருவம். புதுப்புது விடயங்களை அறியத் (கற்க) துடிக்கின்ற பருவம். "செய்யக்கூடாது" என்றால் "செய்து பார்த்தால் என்ன?" என சவால்களை எதிர்கொள்ள விரும்புகின்ற பருவம். அதேவேளை, பதின்ம வயதில் இயற்கையின் விளைவால் "ஹோர்மோன்" களின் தாக்கத்திற்குள்ளாகி தடுமாறுகின்ற பருவம். அதன் ஒரு விளைவால் எதிர்பாலாரைக் கவர்வதற்காக சினிமாத்தனமான கதாநாயக/கதாநாயகித் தனத்தைக் காட்ட முற்படுகின்ற பருவம். இவை உடனடியாக மகிழ்வைத் தரக் கூடியவை. மாணவர்கள் முடிவெடுப்பதும் செயற்படுவதும் அக்கறை செலுத்துவதும் குறித்த தீர்மானம் மகிழ்வைத் தருமா? வேதனையைத் தருமா? என்பதிலேயே தங்கியிருக்கும்.

இதனை விடுத்து தங்களைக் கட்டுப்படுத்தி நீண்டகாலத்தின் பின் பயன்தரக் கூடிய கல்வியில் கவனம் செலுத்தாது குறுகிய காலத்தில் சந்தோசம் தரும் முயற்சிகளில் ஈடுபடவே விரும்புவர். அதேவேளை, சரியான முடிவுகள்/ தீர்மானங்கள் எடுப்பதற்குப் பொறுப்பான மூளையின் குறித்த பகுதியானது **(prefrontal cortex)** சராசரியானவர்களில் பூரண விருத்தியடைய 24 வயது ஆகும்.

**(தொடரும்...)**

பேராசிரியர் எஸ்.கண்ணதாசன்

# கிளிநொச்சியில் ஞானஒளி ஏற்றிய வடிவேற் சுவாமிகள்

ஒரு பிரதேசம் வளர்ச்சியடைந்திருக்கும் போது வாழ்வதற்கு வசதியும் வளமும் கிடைக்கும் போது அப்பகுதியை நோக்கிய மக்கள் நகர்வு பெரும்பான்மையான விடயமாகும். ஓர் பிரதேசம் காடடர்ந்த பிரதேசமாகவும் பாதுகாப்பற்றதாகவும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அப்பகுதிக்கான மக்களின் நகர்வு அதிலும் பார்க்கக் கஷ்டப் பிரதேசத்தில் வாழ்ந்தோர்களால் முடியுமேயன்றி மற்றையோர்க்கு முடியாதுஎன்பதுவெளிப்படைஉண்மை. இவ்வகையில் கிளிநொச்சிக் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது அரசாங்கம் விவசாயஉற்பத்தியை பெருக்கவேண்டும் என்பதற்காக மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்கி மக்களைக் குடியேற்றுவதற்கான செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொண்டது.

துறவு வாழ்க்கையை மேற்கொண்ட வடிவேல் சுவாமிகள் தனது குருநாதனின் சமாதியடைந்துள்ள யாழ்ப்பாணம் கந்தர்மடம்குமாரசாமிவீதியில்அமையப் பெற்றுள்ள சிவகுருநாத பீடத்தில் அமர்ந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்தால் எவ்விதஇடையூறுமின்றிதன்பணியை நிறைவு செய்திருக்க முடியும். இத்தகைய வாய்ப்பும் வசதியும் கிடைத்தபோதும் தூரநோக்கு, விரிந்த சமய ,சமூக சிந்தனை, யோக சுவாமிகளின் அருள்வாக்குஇவையாவும்ஒருங்கேஇணைந்து வடிவேல் சுவாமிகள் கிளிநொச்சியில் வாழ்நாள் முழுவதும் பணிசெய்ய வழிவகுத்து கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திலேயே அவரது சமாதிக் கோவிலும் அமைய வழிவகுத் தது.

இணுவில் பெரிய சந்நியாசியாரின் பிரதம சீடரான காசிநாதரின் இறுதி ஆண்மகனாக 1906 ஆம் ஆண்டு அவதரித்தவரே வடிவேல் ஆவார்கள். பெரிய சந்நியாசியாரின் ஆசிர்வாதத்துடன் அவதரித்த வடிவேல் அவர்கள் கருவிலே திருவுடையார் அவரை ஆட்கொண்டு தொன்மைச் சிவாலயங்களில் ஒன்றான உருத்திரபுரம் சிவாலயம் புனரமைக்கப்பட வேண்டுமென யோகசுவாமிகள் ஞான திருஷ்டியினால் உணர்ந்தார்.

ஒருநாள் வடிவேல் சுவாமிகள் தோளில் மண்வெட்டியுடன் தோட்டத்திலிருந்து வீடு நோக்கிச் சென்றார். அவரின் பின்னால் வந்த மாட்டுவண்டி அவரை முந்திச் செல்கிறது. வண்டியின் பின்னாலிருந்தே யோகர் சுவாமிகள் அவரை நோக்கினார். இருவரும் முற்பிறப்புத் தொடர்பினால் உள்ளத்தால் இணைந்தனர். வடிவேலரின் பக்குவ நிலை கண்ட யோகசுவாமிகள் அவர் உடுத்திருந்த வேட்டியை உரிந்தெடுத்துக்கொண்டார். அவர் மீது போர்த்திருந்த ஆடையை (இருளை) களைந்து உள்ளிருக்கும் ஒளியைக்காண்பித்தார். ஞான ஒளி பெற்ற வடிவேலரை உருத்திரபுரம் செல்லுமாறு ஆசி கூறினார். நயன தீட்சையும் நிர்வாண தீட்சையும் பெற்ற வடிவேலருக்கு உருத்திரபுரம் செல்லுமாறு குரு உபதேசமும் கிடைத்தது. இவ் உபதேசமே வடிவேற் சுவாமி கிளிநொச்சி செல்லவும் மகாதேவா ஆச்சிரமத்தை அமைத்து உருத்திரபுரம் சிவாலயப் பணி மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் சமயப் பணி, சமூகப் பணி ஆற்றுவதற்கு வழிவகுத்தது எனலாம்.



இவ்வழிகாட்டலினால் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியடைந்த குருபரம்பரையினருள் சாஜன் சுவாமிகளின் பரம்பரையினரை அடையும்பேறு வடிவேலருக்குக் கிடைத்தது. இவ்வகையில் சாஜன் சுவாமிகளின் முதல் மாணாக்கரே கனகரெத்தினம்சுவாமிகள் ஆவார்கள். அவரின் மாணாக்கரே மகாதேவ சுவாமிகள் ஆவார்கள். மகாதேவ சுவாமிகளை வடிவேலர் அணுகி அவர் ஆசிர்வாதம் பெற்று குரு உபதேசம் பெற்று வேதாந்த ஞான சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்து தலைமாணாக்கராகத் திகழ்ந்தார்.

இவ்வகையில் வடிவேற் சுவாமி அவர்கள் குருநாதரின் கட்டளையை ஏற்று கிளிநொச்சிக்குச் சென்று தொன்மையான ஆலயங்களைப் புனரமைப்புச் செய்யவும் புதிய ஆலயங்கள் அமையப் பெறவும் வழிவகுத்து மக்கள் வாழ்வியலில் சமய உணர்வை ஊட்டியமையால் அவரால் இன்றும் கிளிநொச்சி நகரம் ஞான்ஒளி பெற்று விளங்குகின்றது. தனது வாழ்வை கிளிநொச்சியின் உயர்விற்காக அர்ப்பணித்து 1990 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 26 ஆம் திகதி ஆயிலிய நட்சத்திரத்தன்று மகா சமாதியடைந்தார். 29 ஆம் ஆண்டு நிறைவு நாளாகிய 5 ஜுலை 2019 ஆயிலிய நட்சத்திரம் அவரது புகழைச் சிந்தித்து நல்வாழ்வு பெற்று வாழ்வோமாக.

ஞானபண்டித ஆன்மீக வித்தகர்
ஆ.சிவநாதன், உப தலைவர், மகாதேவ ஆச்சிரமம்.

## மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்யும் பொலிஸாருக்குப் பணப்பரிசு



(கொழும்பு)

மது போதையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் பொலிஸாருக்கு பணப் பரிசில்களை வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது மக்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தின் சாரதி மது போதையில் இருக்கையில் கைது செய்தால் அந்த பொலிஸ் அதிகாரிக்கு 5000 ரூபா பணப் பரிசும், ஏனைய வாகனங்களை செலுத்தும் சாரதிகளை மதுபோதையில் பிடித்தால் அந்த பொலிஸ் அதிகாரிக்கு 2500 ரூபா பணப் பரிசும் வழங்கப்படும் எனவும் மதுபோதையில் வாகனத்தை செலுத்தும் சகல சாரதிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் எனவும் அவ்வாறு ஆஜர் படுத்தப்படுபவருக்கு எதிராக 25 ஆயிரம் ரூபா வரையில் தண்டப்பணம் விதிக்க சட்டத்தில் இடமிருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1767

Search for people, places and things

### பிரதீப்

குழந்தையின் ஏக்கம் கண்களில் தெரிகிறது உங்கள் கண்முன் இது போன்ற மனிதர்களைப் பார்த்தால் சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுங்கள்




### கவின்

போர்வைக்குள் இருந்து வரும் வெளிச்சம் பலருடைய வாழ்க்கையை இருளாக்கிக் கொண்டிருக்கின்றன



### கௌசிக்



மரம் வளர்க்கச் சொன்னதைத் தப்பாப் புரிஞ்சி கிட்டாங்க போல சரி ஏதோ மரம் வளர்த்தா சரி

### யூகி

கல்யாணத்துக்கு அப்புறம் ஏங்க நல்லாச் சாப்பிட மாட்டேங்கிறீங்க... நல்லா இருந்தா நானா சாப்பிடமாட்டேன்



### வைஸ்ணா

அடுத்தவர் வலி அறிந்து வாழுகிறவன் யாரையும் காயப்படுத்திப் பார்க்கமாட்டான். அவரது கண்ணீருக்கும் காரணமாக இருக்கமாட்டான்



### கண்மணி

முன்பெல்லாம் வயலில் வேலை செய்யும் போது ஒரு கார் போனா அதிசயமாகப் பார்ப்பாங்க... இப்ப காரில் போகும் போது எங்கையாவது பச்சைப் பசேல்னு வயல் தெரிதான்னு பார்க்க வேண்டியிருக்கு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேசிய பாடசாலைகளில் வெற்றிடம் காணப்படின் விண்ணப்பிக்கலாம்

## கல்வியமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளுக்கு, இடைநிலைத் தரங்களில் மாண வர்களை சேர்த்துக்கொள்ளும் முறையை மேலும் விஸ்தரிக் குமாறு, கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் அதிகாரிக ளுக்கு பணிப்புரை விடுத்துள் ளார்.

இதற்கமைய, இந்த வருடம் (2019)முதல் இடைநிலை வகுப்பு களில் மாணவர்களை இணைத் துக்கொள்வதற்காக விண்ணப் பிக்கும் போது, பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் குறித்து அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு பெற்றோருக்கு வழங்கப்படவுள் ளது.

தேசியப் பாடசாலைகளுக்கு, தரம் 1-5 மற்றும் 6 ஆம் தரங்க ளுக்கு மாணவர்களை இணைத்து கொள்ளும் போது, கல்வி அமை ச்சின் செயலாளரின் 2008/37 என்ற சுற்று நிருபத்துக்கமைய மேற்கொள்ள வேண்டுமென, கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது.

வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மாண வர்களின் எண்ணிக்கைகளுக்கு அமைய, வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்கு மாணவர் கள் இணைத்துக் கொள்ளப்படு வர்.

வெற்றிடம் நிலவும் பாடசா லைகள், விண்ணப்பிக்கும் முறை



என்பன தொடர்பான சகல தக வல்களையும் www.moe.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற் றுக்கொள்ள முடியுமென, கல்வி அமைச்சு மேலும் அறிவித்து ள்ளது. (7)

# நாட்டில் நல்லாட்சியைக் கொண்டு செல்ல மகா சங்கத்தினரின் அறிவுரை அவசியம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னைய மன்னர் காலத் தைப் போன்று நாட்டில் நல்லாட் சியைக் கொண்டு செல்வதற்கு மகாசங்கத்தினரின் அறிவுரை அவசியம் என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.

இந்த ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய செயற்படுவது மிக முக்கியம் என்பதை உணர்ந்தே அன்றும் இன்றும் தான் செயற்பட்டு வரு வதாகவும் தெரிவித்தார்.

புத்த பெருமானால் மகாசங் கத்தினருக்கு போதிக்கப்பட்ட ஒழுக்கக் கோட்பாடுகள் பௌத்த



சாசனத்தின் அடிப்படையாகவே காணப்பட்டது. தேவநம்பியதி ஸ்ஸ மன்னர் ஆட்சிக் காலம் முதல் சிங்கள மன்னர்கள் பௌத்த மதத்தை நிலைநாட்டுவதற்கும் பௌத்த துறவற கிரியைகளை மேற்கொள்வதற்கும் அரச அனு சரணை வழங்கியதாகவும் தெரி வித்த ஜனாதிபதி இலங்கை ஆயி ரம் வருடத்திற்கும் மேலாக தர்ம இராச்சியமாக விளங்குவதற்கு அதுவே காரணமாக அமைந்தி ருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி நேற்று முன்தினம் உட்ரட்ட அமரபுர சங்க சபைக்கு சொந்தமான மகாவலி நதிக் கரையில் நிர்மாணிக்கப்பட்டு ள்ள போதனை மண்டபத்தை மகாசங்கத்தினரிடம் கையளிக் கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண் டவாறு தெரிவித்தார். (7)

# அமெரிக்க - இலங்கை உடன்படிக்கைகளை அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்த முயற்சி

## ஹெக்டர் அப்புஹாமி குற்றச்சாட்டு



(கொழும்பு)

அமெரிக்காவுடனான மூன்று ஒப்பந்தங்களையும் மையமாகக் கொண்டு எதிரணியினர் அரசி யல் இலாபம் காணவே முயற்சிக் கிறார்கள். இந்த ஒப்பந்தங்களால் எமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும் மிலே னியம் சவால்கள் கூட்டு ஒப்பந் தத்தினூடாக 680 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான த்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆளும் தரப்பு பாராளும ன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்பு ஹாமி தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பின் போது கருத் துத் தெரிவித்த அவர், இது தொட ர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்களை தொட ர்ந்து சிலர் நாட்டின் இனவாதக் கருத்துக்களைத் தோற்றுவித்து குழப்ப நிலையைத் தோற்றுவிக்க முயற்சித்தனர்.

ஆனால் அது அவர்களின் எதிர்பார்ப்புக்கு பலனளிக்கவி ல்லை. இந்நிலையில் தற்போது அமெரிக்காவுக்கு எதிரான கருத் துக்களை எதிரணியினர் முன் வைத்து வருகின்றனர்.

1994 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்திலேயே படைக ளின் அந்தஸ்து (சோபா) உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை மாற் றியமைக்க இதுவரையில் அர சாங்கம் எந்த நடவடிக்கையும் எடு க்கவில்லை. இது குறித்து கலந் துரையாடல்கள் மாத்திரமே தற்போது இடம்பெற்று வருகின் றன.

அதனையடுத்து 2007 ஆம் ஆண்டு கோத்தபாய ராஜபக்ஷ வினால் எக்ஷா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்ப ந்தத்துக்கான 10 வருட காலம் நிறைவடைந்துள்ள நிலையில், அந்த மீள் பரிசீலனை நடவடிக் கைகளே தற்போது இடம்பெற்று வருகிறது. கால எல்லை நிறை வடைந்து 180 நாட்களுக்குள் இந்த ஒப்பந்தத்தில் இருந்து இல ங்கை விலகிக் கொள்ளக் கூடிய வகையிலான புதிய ஏற்பாடொ ன்றும் கொண்டுவரப்பட்டுள்ளது என மேலும் அவர் தெரிவித் தார். (7)

# செய்தித்துளிகள்

## வழமைக்குத்திரும்பியது சமூக வலைத்தளங்கள்

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வட்ஸ்அப் முதலான சமூக வலை தளங்களைப் பயன்படுத்துவதில் சர்வதேச ரீதியில் நேற்று முன் தினம் ஏற்பட்டிருந்த தடங்கல் நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக், இன்ஸ்டிகிராம், வட்ஸ்அப் முதலான சமூக வலைத் தளங்களில் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளைப் பகிர்வதில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் உலகளாவிய ரீதியில் தடங்கல் ஏற்பட்டது.

வலைத்தளங்களில் பராமரிப்புப் பணிகளில் இடம்பெற்றதால்தான், குறித்த தடங்கல் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்றைய தினம் குறித்த தடங்கல் நிலை சீர்செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## பிரதேச சபை உறுப்பினருக்கு மறியல்

(நரம்மல)

கைதுசெய்யப்பட்ட நரம்மல பிரதேச சபையின் உப தவிசாளர் மஞ்சுள பொல்கம்பொல மீண்டும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

நாரம்மல பொலிஸ் நிலையத்தில் வைத்து, பொலிஸ் அதிகாரி ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அவர், நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதற்கமைய, அவரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (7)

## லொறி மோதியதில் நபர் ஒருவர் பலி

மாதம்பை, மெல்லவாகாரப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சைக்கிள் ஒன்றுடன் லொறி ஒன்று மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற இவ் விபத்தில் மாதம்பை, மெல்லவாகார பகுதியை சேர்ந்த குரணகே பீட்டர் எனும் 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் மாதம்பை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 110 | 125 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 420 | 400 |
| தக்காளி | 100 | 80 | 70 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 150 | 110 | 100 |
| கோவா | 80 | 80 | 80 | 65 | 80 |
| கரட் | 140 | 160 | 120 | 130 | 160 |
| பூசணி | 150 | 150 | 100 | 150 | 120 |
| புடோல் | 70 | 80 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 190 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 140 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 60 | 120 |
| பயற்றங்காய் | 150 | 160 | 60 | 120 | 160 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 | 80 | 80 |
| பீற்றூட் | 80 | 60 | 70 | 70 | 100 |
| கறிமிளகாய் | 160 | 160 | 120 | 120 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 150 | 200 | 200 |
| போஞ்சி | 150 | 140 | 120 | 130 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 60 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 220 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 35 | 20-25 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 200 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 30 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | — | 110 | 60 |




# மாசிலாபுரத்து கிணற்று நீர்



நூறு வருடங்களுக்கு முன்னால், அதாவது நம் நாட்டை பிரிட்டிஷார் ஆண்டு கொண்டிருந்த காலம், தமிழ்நாட்டில் மாசிலாபுரம் என்னும் ஒரு ஊர் இருந்தது.

அந்த ஊரில் சுமார் இருநூறு குடும்பங்கள் வசித்து வந்தன. அவர்களது முக்கிய தொழில் விவசாயம்தான்.

அந்த ஊர் ஐந்து தெருக்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் பொதுக் கிணறு ஒன்று இருந்தது. அந்தக் கிணற்றில் தான் அந்த ஊர் மக்கள் அனைவரும் வந்து "இறைத்து" குடிப்பதற்கும் மற்றத் தேவைகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.

அதனால் எப்பொழுதும் அந்தக் கிணறுக்கு அருகில் ஆண்கள், பெண்கள் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

அந்தக் கிணறுக்கு இதனால் மிகவும் பெருமை. நம்மால் தான் இந்த ஊர் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருந்தது. அதனால் அந்தக் கிணறுக்குள் எப்பொழுதும் தண்ணீர ஊறி கிணறு நிறைந்து தளக்... புளக்... என்ற சத்தத்துடன் காணப்படும். இப்படியாக அந்த ஊரின் வாழ்க்கை போய்க்கொண்டிருந்த பொழுது ஒரு நாள்!

அந்த ஊரில் கணபதியப்பன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் வையாபுரி பிரிட்டிஷ் இராணுவத்தில் வட நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தான். அவ்வப்பொழுது ஊருக்கு வந்து அப்பா, அம்மாவைப் பார்த்து விட்டு செல்வது அவனது வாடிக்கை. அப்படி ஒரு முறை வீட்டுக்கு வந்தவன், அம்மா தண்ணீர் பிடித்து வருகிறேன் என்று குடத்தை எடுத்து கிளம்பும்போது நானும் உன் கூட வருகிறேன் என்று சொன்னான். அம்மா வேண்டாமடா நீ வீட்டில இரு, நான் விரைவாகப் போய் ஒரு குடம் தண்ணி எடுத்திட்டு வந்திடுறேன் என்று சொல்ல இவன் அம்மாவின் தோளைப் பற்றிக்கொண்டு அம்மா...என் செல்ல அம்மா நான் வந்து இன்றைக்கு உனக்கு தண்ணி "இறைத்து" தருவேன் என்று கொஞ்சவும், சரி வா என்று அவனையும் அழைத்துக் கொண்டு அந்தக் கிணற்றுக்கு வந்தாள்.

அந்தக் கிணறு இந்த ஊரில் இருப்பவர்களை நன்கு தெரிந்து வைத்திருக்கும். காரணம் குழந்தை முதல் பெரியவர்கள் வரை எப்படியும் ஒரு முறை இந்த கிணற்றுக்கு வந்து சென்றிருக்க வேண்டும். அதனால் அந்த கிணறு எல்லோரையும் ஞாபகம் வைத்திருக்கும். வையாபுரியை பார்த்தவுடன் இது இன்னாரின் பையன் என்று தெரிந்து கொண்டது. என்றாலும் வாய்விட்டு சொல்ல முடியாதல்லவா! அதனால் தளக்... புளக்... என்று அலைகளை எழுப்பி சத்தம் இட்டது.

அம்மாவுக்கு தண்ணீர் இறைக்கும் போது "ஏனம்மா நீங்க இரண்டு பேரும் பேசாம என் கூட டில்லி வந்திடுங்களேன். ஐயோ..நாங்க வரலையப்பா, அவ்வளவு தூரம் எல்லாம் எங்களால் வர முடியாது. அங்க எல்லாம் ரொம்ப குளிருமாமே

குளிரும் இருக்கும், நல்லா வெயிலும் அடிக்கும், என்னை அடுத்த மாசம் அநேகமாக லண்டனுக்கு அனுப்புவாங்கன்னு நினைக்கிறேன்.

அவ்வளவு தூரம் அம்மாவையும் அப்பாவையும் விட்டுப் போறியா? அம்மா, அம்மா போய் ஆறு மாசத்தில திரும்பி வந்துடுவேன்.

எப்படி அவ்வளவு தூரம் போவீங்க? குதிரை வண்டியிலையா?

பையன் சிரி சிரி என்று சிரிக்கிறான், அம்மா "இன்னும் இந்த கிணத்து தண்ணியாட்டமே" இருக்கறாயே, கடல் தாண்டி போகணும். ஐயோ கடலா அது எப்படி இருக்கும்?

மறுபடி சிரித்து, அம்மா நிறைய தண்ணியும் ரொம்ப பெரிசா இருக்கும்.

அப்ப இதைவிட பெரிய கிணறா இருக்குமா?

மறுபடி சிரிக்கிறான், அம்மா இந்த கிணறு எல்லாம் கடலுக்கு ஒரு துளி கூட இல்லையம்மா.

அப்ப அதில எப்படி போவாய்? கப்பல்ல போவேன்மா.. அது எப்படி இருக்கும்? அதுவும் பெரிசா இருக்கும்..

சரி சரி எப்படியோ பத்திரமா போயிட்டு திரும்பி வந்து சேரு. சொல்லிக்கொண்டே அம்மா தண்ணீர் நிரம்பிய குடத்தை தூக்கிக்கொண்டாள்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கிணற்றுக்கு தாங்க முடியாத கோபம் வந்து விட்டது. இந்த ஊருக்கே தண்ணிய கொடுத்துகிட்டு இருக்கேன், என்னைப் போய் கேவலமாகப் பேசிட்டானே இந்த தம்பி. பாக்கலாம் நானும் அந்த கடலை பாக்கணும். பார்க்கலாம் அது என்னை விட பெரிசா? இல்லை நான் பெரிசான்னு.

இப்படி நினைத்துக்கொண்டாலும், எப்படி கடலை பார்ப்பது என்று ஒரே சிந்தனையாக போய் விட்டது அந்தக் கிணறுக்கு.

இதை நினைத்து நினைத்து கிணறுக்கு தண்ணீர் கூட கொஞ்சம் வற்றி விட்டது.

என்ன கிணத்தில தண்ணி வற்றினமாதிரி இருக்கு? என்று ஊர் மக்கள் இரண்டு நாட்களிலேயே பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

கிணறுக்கோ எப்படியும் கடலை பார்த்தே தீரவேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது.

கணபதியப்பனின் மனைவி நான்கு நாட்கள் கழித்து மீண்டும் தண்ணீர் எடுக்க வந்தாள். அங்குள்ள பெண்கள் கேட்டார்கள், பையன் கிளம்பியாச்சா?

இல்லை இன்றைக்குத்தான் கிளம்புறான். அதுக்குள்ள தண்ணி எடுத்துட்டு போயிடலாமுன்னு வந்தேன்.

நம்ம ஊர் தண்ணியை போத்தல்ல பிடிச்சுக் கொடுத்துடு. போய் சேர்ற வரைக்கும் குடிக்க தண்ணி வேணுமில்லை... அங்குள்ள பெண்கள் யோசனை சொன்னார்கள்.

இதை கேட்டுக்கொண்டிருந்த கிணறுக்கு ஒரே சந்தோசமாகி விட்டது. எப்படியும் போத்தலில் என்னை ஊற்றி கொடுப்பார்கள். நான் அவனுடன் வட இந்தியாவுக்குச் செல்வேன், முடிந்தால் கடலையும் பார்க்க முடியும் என்று நினைத்துக் கொண்டது.

அந்தக் கிணறின் அதிர்ஷ்டமோ என்னவோ முக்கால்வாசி குடித்து விட்டு மிச்சத்தண்ணீருடன் போத்தலை கணபதியப்பன் பையன் தன் கைப்பையிலேயே வைத்துக்கொண்டான்.

ஒரு வாரத்திற்குள் அவனுக்கு லண்டனுக்கு செல்ல ஆர்டர் வந்து விட்டதால் லண்டனுக்கு கப்பல் ஏறி விட்டான். கப்பலில் அங்கு போய்ச் சேர ஒரு மாதம் ஆகும்.

கப்பல் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. மேல் மாடியில் ஒரு அறையில் இருந்து வெளியே வந்த வையாபுரி கப்பலின் மட்ட தளத்திற்கு வந்து நின்று கீழே குனிந்து கடலை பார்த்துக்கொண்டிருந்தான். கடல் பெரிய பெரிய அலைகளுடன் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அவனுக்கு தாகம் எடுத்தது. தண்ணீர கையில் எடுத்து வராதது ஞாபகம் வரவே, மீண்டும் அவன் அறைக்கு ஓடிச் சென்றவன் தன் கைப்பையை திறந்து பார்க்க அந்தக் கிணறின் மிச்சத் தண்ணீர் அப்படியே இருந்தது. ஆனால் ஊரில் இருந்து எடுத்து வந்து பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டதே?

சட்டென கப்பலின் மட்டத்துக்கு வந்து கப்பல் ஓரம் சென்று போத்தலில் இருந்த மிச்சத் தண்ணீரை முழுவதும் கடலுக்குள் கொட்டினான். மீண்டும் புதிதாக தண்ணீர் பிடிக்க உள்ளே சென்றான்.

கடலுக்குள் விழச் சென்று கொண்டிருந்த மாசிலாபுரம் கிணற்று நீர் கீழே கடலை பார்த்து தன்னைவிட பெரியவன் என்று மனதுக்குள் ஒப்புக் கொண்டாலும் தான் விழுந்தவுடன் பெரிய அலைகள் உருவாகிக்கொண்டிருப்பதை பார்த்து என்னுடைய ஒரு துளி தண்ணிக்கே இந்தக் கடல் இப்படி பயந்து குதிக்குதே என்று நினைத்துக் கொண்டே உள்ளே சங்கமமாகி விட்டது.

குட்டீஸ் நாமும் கிணற்று தண்ணீரின் எண்ணத்துக்கு மதிப்பளித்து அந்த மிச்சத் தண்ணீர் விழுந்ததற்கு கடல் பயந்து குதிக்கிறது என்பதை ஏற்றுக் கொள் வோமா? இல்லை என்றால் கிணற்றுத் தண்ணீருக்கு வருத்தமாகி விடும் இருந்தாலும் கிணற்று நீர் கடலை அடையவேண்டும் என்று நினைத்து சாதித்து விட்டதற்கு நாம் பாராட்டத்தான் வேண்டும் இல்லையா குட்டீஸ்.

## விடுகதைகளும் விடைகளும்

• வானம் இருண்டால் வடிவழகி ஆடுவாள். அவள் யார்?

**மயில்**

• நன்றி மறக்காத பிள்ளை, நம்ம வீட்டு செல்லப் பிளிளை. அது யார்?

**நாய்**

• இரட்டைக் குழல் துப்பாக்கியில் காற்று வரும் போகும். அது என்ன?

**மூக்கு**

• வெட்கையிலே மலரும் பூ, வெகுபேர் பசி போக்கும். அது என்ன?

**சோறு**

• உங்க டீச்சர் ஒரு நாளைக்கு சுமாரா எத்தனை பாடம் நடத்துவார்?
எல்லா பாடத்தையுமே அவர் சுமாராத்தான் நடத்துவார்.

• **ஆசிரியர்:** ஏன்டா உன் புத்தகங்களை எல்லாம் பக்கத்து டேபிள்ள வச்சிட்டு நீ வந்து இங்க உட்கார்ந்திருக்க?
**மாணவன் :** நீங்க தானே சார் பிரச்சினைகளை தள்ளி வைக்கணும்னு சொன்னீங்க?

## அன்பு செய்தல்

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டு புல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வன வோ?

மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள்புற்கள் மலிந்திருக்குமென்றே?

யானெதற்கும் அஞ்சுகிலேன், மானுடரே,நீவிர்
என்மதத்தைக் கைக் கொண்மின்பாடுபடல்வேண்டா
ஊனுடலை வருத்தாதீர்உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்!

யாகாவாராயினும் நா காக்க
~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கடும் விமர்சனத்துக்குரிய சம்பந்தரின் உரை

தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில் இரா.சம்பந்தர் அவர்கள்; ஆயுதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டி வரும் என்ற பொருள்பட ஆற்றிய உரை தொடர்பில் முகநூல்களில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட வெளிநாட்டில் வாழ்ந்து விட்டு தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள கத்தோலிக்க மதகுரு ஒருவர் உட்பட சிலரை படை வீரர்கள் போல சித்திரித்து கேலிச் சித்திரங்கள் வெளியாகி உள்ளன.

இது தவிர, தமிழ் மக்கள் மத்தியிலும் இரா. சம்பந்தரின் உரை பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

எதற்காக சம்பந்தர் அவர்கள் இவ்வாறு உரையாற்றினார் என்ற கேள்விகளுக்கு பல்வேறு பதில்கள் முன்வைக்கப்படுகின்றன.

தமிழ் இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடத் தயாராக இருப்பதுபோல காட்டிக் கொள்வதன் மூலம், தமிழ் இளைஞர்களை மீண்டும் கைது செய்து சிறைகளில் அடைப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதி வேலையாகவே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் உரையாற்றினார் என்று கூறுவோரும்.

இரா.சம்பந்தரின் உரையானது, முன்னாள் போராளிகள் மீது படையினருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்த வைத்து, அவர்கள்மீது மீண்டும் விளக்கம் விசாரணை என்பவற்றை ஏற்படுத்தச் செய்து, வடக்குக் கிழக்குப் பகுதியை பதற்றமான சூழ்நிலையில் வைத்திருப்பதுதான் உள்ளார்ந்தம் என்று கூறுவோரும்.

இதுமட்டுமல்ல, சிறைகளில் அடைபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு விரும்புகின்ற அரசாங்கத்துக்கு உதவும் வகையிலேயே சம்பந்தர் மேற்கண்டவாறு உரையாற்றினார் என்று சிலாகிப்போரும் உளர்.

எதுஎவ்வாறாயினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவ்வாறானதொரு உரையைத் தவிர்த்திருக்க வேண்டும் என்பது பொதுவான கருத்து.

இதை நாம் கூறும்போது, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் தனது உரையில் போராட்டம் வெடிக்கும் என்று கூறினாரே என்று யாரேனும் கேட்கலாம்.

ஆனால் அவ்வாறானதொரு கேள்வி தேவையில்லை. ஏனெனில் வழமையில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆற்றுகின்ற உரையில் போராட்டம் வெடிக்கும் என்ற சொற்பிரயோகம் நிச்சயம் இடம்பெற்றிருக்கும்.

ஆகையால் மாவை சேனாதிராசா அவர்களால் கூறப்படும் போராட்டம் வெடிக்கும் என்ற உரை பெரிதான தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது. சிலவேளை போராட்டம் வெடிக்கும் என்று அவர் உரையாற்றாமல் விடுவாராக இருந்தால் அந்த உரை சிலவேளை சந்தேகத்தை ஏற்படுத்தலாம்.

ஆனால் சம்பந்தர் ஆற்றிய உரை திட்டமிடப்பட்டது என்பதனால் அவரின் உரை கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளது.

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(கொடிகாமம்)

நாவற்குழி சித்தி விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சித்திவிநாயகர் முன்பள்ளியின் ஆசிரியர் திருமதி கமலேந்திரன் சர்மிளா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்த மருத்துவத்துறை வைத்திய கலாநிதி திருமதி அருந்ததி சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.வினோதன் சித்தி விநாயகர் ஆலய நம்பிக்கை பொறுப்புச்சபை கு.கிரீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-3,114)

## சீனி அடங்கிய பானத்திற்கு வரி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

சீனி அடங்கிய பானத்திற்கு மீண்டும் வரி விதிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

52 நாட்கள் நாட்டில் ஏற்பட்ட அரசியல மாற்றத்தின் போது அப்போதைய பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஸ குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை நீக்கினார்.

இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் நோக்கில் இன்று வெள்ளிக்கிழமை நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் விசேட பேச்சுவார்த்தை அவரது அமைச்சில் இடம்பெறவுள்ளது.(ம-10)

## நாட்டில் 1800 மத்ரசா பாடசாலைகள்
### பாகியங்கல ஆனந்தசாகர தேரர் தகவல்

நாட்டில்1800 மத்ரசா பாடசாலைகள் செயற்படுவதாகவும் அதில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சம்பந்தமான தகவல்கள் எதுவும் இதுவரை இல்லை என்று பாகியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மியன்மார் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் 1700 பேருக்கும் அதிகமானோர் இருப்பதாகவும், அவர்கள் தற்போது முகாம்களுக்கு வெளியிலேயே இருப்பதாக பாதுகாப்புத் தரப்பினரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களில் தெரிய வந்துள்ளதாகவும் அதே நேரம் ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னிந்தியாவில் இருந்து படகு மூலம் வந்த சிலர் மட்டக்களப்பு மற்றும் மன்னார் பிரதேசங்களில் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது எனத்தெரிவித்தார்.

இவை தவிர லெபனானில் இருந்து 60 பேர், ஏமனில் இருந்து 20 பேர், பலஸ்தீனில் இருந்து 53 பேர், ஈராக்கில் இருந்து 32பேர் என்று 11,000 பேர் வரை நாட்டில் அடிப்படைவாதக் கல்வியில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் தெரிய வந்துள்ளதாக மேலும் தெரிவித்தார். (7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஒருமுகப்படுத்தலும் விரிவடைதலும்

ஒருமுகப்படுத்தல் மனதை நுண்ணிய சக்தி உடையதாக்குகிறது. தளர்ந்த ஓய்வு நிலை மனதை விரிவடையச் செய்கிறது. நுண்ணிய சக்தியற்ற, விரிவடைந்த மனத்தால புனிதமான வளாச்சியை ஏறபடுதத முடியாது. அதே சமயம நுணணய சகதி படைதத விரிவடையாத மனமானது மன இறுக்கம், கோபம், ஏமாற்றம் ஆகியவற்றைத் தருகிறது.

ஒருமுகப்பட்ட மனம், விரிவடைந்த மெய்யுணர்வு இவற்றிடையே உள்ள சமநிலை நிறைவை ஏற்படுத்துகிறது.

அத்தகைய நுண்ணிய சக்தியுள்ள, எல்லையற்ற மெயயுணாவை மலரச செயவதே சுதாசனககிரியா, முதுநிலைப் பயிற்சியில் உள்ள தேர்ந்த திறன்களின் (Techniques) இலக்காகும் (குறியாகும்). இதில் சேவையும் பொறுப்பேற்கும் உணர்வும் பெரும் பங்கேற்கின்றன. உணவும் மனப்பான்மையும் கூட அதற்கு உதவுகின்றன.

அமைதியும் ஆனந்தமும் தான் விரிவடைந்த மெய்யுணர்வு. அன்பு, கற்பனை, எண்ணம் இவற்றிலிருநது ஆககும திறனும தான ஒருமுகபபடட மெயயுணர்வு.

ஒருமுகப்பட்ட மெய்யுணர்வின் ஒரு குறித்த (Point) நிலைதான் தனியொரு ஆன்மா.

பரந்த மெய்யுணர்வின் ஒவ்வொரு அணுவும் நுண்ணிய சக்தி படைத்ததாக ஒருமுகப்பட்ட நிலையையுடையதாக ஆகும்போதுதான் தெய்வீகத் தன்மை விழித்தெழுகிறது.

## வவுனியா பாடசாலை மைதானத்தில் தீ பரவல்

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரிகுளம் அலகல்ல வித்தியாலயத்தில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட தீ பரவலால் பாடசாலை மைதானம் எரிந்துள்ளது.

நேற்று பிற்பகல் 12மணியளவில் பாடசாலைக்கு அருகே காணப்பட்ட வெற்றுக்காணிக்கு வைக்கப்பட்ட தீயானது காற்றினால் பரவி அருகிலுள்ள பாடசாலை மைதானத்திற்குள் சென்றுள்ளது. இதனால் பாடசாலை மைதானத்தில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரினால் வவுனியா நகரசபை தீ அணைக்கும் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்ற தீ அணைக்கும் பிரிவினர் தமது முயற்சியினால் தீபரவலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். இச்சம்பவத்தில் பாடசாலை மாணவர்கள் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-3,299)

## வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அதற்குச் சமாந்தரமான பணியாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 12.45 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம் பெறும்.

இப்பரீட்சைக்கு சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் தவறாது தோற்றுமாறு சபையின் நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமையாளர் கலாநிதி பாலசுப்பிரமணியம் சுதாகரன் அறிவித்துள்ளார். (7)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் கைது

(கல்லடி)

திருகோணமலை - கல்லடிச்சேனை கடற்பிரதேசத்தில் நேற்று கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போதே குறித்த சந்தேகநபர்கள் 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 24 - 60 வயதுக்கு இடைப்பட்ட, கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து இரு மீன்பிடிப் படகுகளும, தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (7)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

வழிபடுகின்ற தெய்வத்தை உள்ளத்தில் அமைத்து மந்திர எண்ணிக்கையின்றி அமைதியுடன் மனத்தை ஒருமுகப்படுத்தி நிலைத்து நிற்றல் தியானம். வழிபடு மூர்த்தியை உள்ளக் கண்ணால் நோக்கி உதடு அசையாமல் ஜெபமாலையை உருட்டி 108, 1008 என்ற எண்ணிக்கையுடன் ஜெயிப்பது ஜெயம்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எந்தெந்த சாபங்களினால் என்னென்ன பாவங்கள் ஏற்படும்?

**கோ சாபம்**

பசுவை வதைப்பது, பால் மரத்த பசுவை வெட்டக் கொடுப்பது கன்றுடன் கூடிய பசுவைப் பிரிப்பது, தாகத்தால் பசு தவிககும போது தணணர கொடுககாதது போனற காரணங்களால் கோ சாபம் ஏற்படும். இதனால், குடும்பத்திலோ வம்சத்திலோ எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் போகும்.

**ரிஷி சாபம**

இது கலியுகத்தில் ஆச்சார்ய புருஷர்களையும் உண்மையான பக்தர்களையும் அவமதிப்பது போன்றவற் றால் ஏற்படும்.ரிஷி சாபத்தால், வம்சம் அழியும்.

**முனி சாபம**

எல்லை தெய்வங்கள், மற்றும் சின்னசின்ன தெய்வங்களுக்கு வழங்க வேண்டிய மரியாதைகளையும் பூஜையையும் மறப்பது முனி சாபத்தை ஏற்படுத் தும். முனி சாபத்தால் செய்வினைக் கோளாறு ஏற்படும்.

**குலதெய்வ சாபம்**

இது நமது முன்னோர்கள் பூஜித்த தெய்வத்தை மறக்காமல் இருப்பது. குலதெய்வ சாபத்தால் குடும்பத்தில் ஒரு போதும் மகிழ்ச்சி ஏற்படாமல் போகும். (முற்றும்)

# தேசிய குத்துச்சண்டை போட்டியில் வடக்கிற்கு 19 பதக்கங்கள்!

(குருமன்காடு)

தேசிய ரீதியில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்ட வடக்கை சேர்ந்த வீர,வீராங்கனைகள் 19 பதக்கங்களை வென்று வட மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் மாத்தறை மாவட்டத்தில், அக்குரஸ்ஸ பகுதியில், அத்துறுகிரிய பிரதேசசபை மண்டபத்தில் கடந்த 28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் வவுனியா, பதுளை, கண்டி, மாத்தறை, குருநாகல், கம்பொல ஆகிய மாகாணங்களை சேர்ந்த 250 குத்துச்சண்டை வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை பிரான்ஸ் "சவேட்" அமைப்பின் ஏற்பாட்டில் தேசிய மற்றும் சர்வதேச குத்துச் சண்டை பயிற்றுநர் மற்றும் இலங்கை பிரான்ஸ் "சவேட்" தேசிய கூட்டமைப்பின் தலைவருமான சி.பூ. பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணத்தை பிரதிபலித்து வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா ஏழாம் அறிவு தற்காப்புக்கலை சங்கத்தின் தலைவரும், வடமாகாண குத்துச் சண்டை (கிக் பொக்சிங்) பயிற்றுவிப்பாளருமான எஸ்.நந்தகுமார் தலைமையில் சென்ற வீர, வீராங்கனைகள் குத்துச் சண்டையில் கலந்துகொண்டு பதினொரு தங்கப்பதக்கங்களையும், ஐந்து வெள்ளிப் பதக்கங்களையும், மூன்று வெண்கலப் பதக்கங்களையும் வென்று வட மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.



அத்துடன் அகில இலங்கை ரீதியில் குத்துச்சண்டையில் (கிக் பொக்சிங்) வடமாகாணம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளதுடன் அதற்கான கேடயத்தை பிரான்ஸ் "சவேட்" தேசிய கூட்டமைப்பின் தலைவர் சி.பூ. பிரசாந் விக்கிரமசிங்க வழங்கி வைக்க வட மாகாண கிக் பொக்சிங் பயிற்றுவிப்பாளர் எஸ்.நந்தகுமார் பெற்றுக்கொண்டார். (க-250)

## அரியாலை திருமகள் வெற்றிக்கிண்ணத்துக்கான வட மாகாண மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு M.S. விஸ்வநாதன் குடும்பத்தினரது அனுசரணையில் திருமகள் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் கொண்ட போட்டியாக வட மாகாண ரீதியிலான கழகங்களுக்கிடையிலே நடத்தப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் அணிகள் பதிவுகளை நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாக பதிவினை மேற்கொள்ள முடியும்.

தொடர்பு கொள்ள வேண் டிய இலக்கங்கள் சஞ்சீவன்- 076 844 7081, தினேஸ்-077 668 4302, கோகுலன்- 075 763 4622, நிசாந்தன்- 076 682 9413.

பதிவுகளுக்கான இறுதித் திகதி 14.07.2019. போட்டிகள் யாவும் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## மாகாண சம்பியனாகியது யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட பெண்கள் அணி

வடமாகாண வருடாந்த விளையாட்டு விழாவின் பெண் களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் கிளிநொச்சி மாவட்ட உள்ளக அரங்கில் நடைபெற்றது. போட்டியின் இறுதியில் நடப்பு சம்பியன் யாழ்.மாவட்ட அணி கிளிநொச்சி மாவட்ட அணியினை 33:8 ரீதியில் வீழ்த்தி 2019 ஆம் ஆண்டின் வட மாகாண சம்பியனாகியது. (க)



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்








2019 ஆம் ஆண்டு வட மாகாண பாடசாலைகளிற்கு இடையிலான கராத்தே போட்டி கடந்த 29,30 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவர்கள் 4 தங்கம் உட்பட 20 பதக்கங்கள் பெற்று அதிகூடிய இடங்களைப் பெற்ற பாடசாலையாக திகழ்வதோடு ஆண்களிற்கான குழுச் சண்டைப் போட்டியில் 1 ஆம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணத்தையும்,பெண்களிற்கான குழுச் சண்டைப் போட்டியில் 2 ஆம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணத்தையும்,பெண்களிற்கான குழுக் காட்டா போட்டியில் 2 ஆம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணத்தையும் பெற்று இந்த ஆண்டிற்கான தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். (க)

## தேசிய சம்பியனாகியது யாழ்.மாவட்ட அணி



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 31 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் பெண் களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டிகள் குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்றது.

போட்டியின் அரையிறுதியில் கொழும்பு மாவட்ட அணியினை 65:48 ரீதியில் வீழ்த்திய யாழ்.மாவட்ட மகளிர் அணி இறுதிப்போட்டிக்கு நுழைந்து.

தீர்மானம் மிக்க இறுதிப் போட்டியில் நடப்பு அந் தஸ்து அங்கீகாரத்துடன் களமி றங்கிய யாழ்.மகளிர் அணி கொழும்பு நாகர்புர அணியினை 48:45 ரீதியில் வீழ்த்தி சம்பியனாகியது மட்டுமின்றி தொடர்ந்து நான்கு வருடங்கள் தொடர் சம்பியன் சாதனையையும் நிலை நாட்டியது. (க)

## மனித உரிமைகள் ஆணைக்குழு...

வுக்கு எழுதியுள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர், அதனுடன் தொடர்புடையவர்களைக் கண்டறிவதற்காக பொலிஸ் திணைக்களத்தினால் விரைந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகளைப் பாராட்டுகின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் நியாயமானவை என்றாலும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகள் தன்னிச்சையான மற்றும் சட்டவிரோதமானது இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்த விரும்புகின்றோம்.

சில கைதுகள் கலாசார ரீதியிலான் புரிந்துணர்வின்மை மற்றும் பொதுமக்களில் சிலர் வெளியிட்ட சந்தேகத்தின் அடிப்படையில் என சட்டத்திற்கு முரணான கைது நடவடிக்கைகள் குறித்து அண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உதாரணமாக பெண்ணொருவர் அணிந்திருந்த ஆடையில் தர்ம சக்கரம் ஒன்றைக் காரணம் காட்டி கைது செய்யப்பட்டமை அரேபிய மொழியில் கருத்துக்களைப் பதிவிட்டிருந்த சிலர் கைது செய்யப்பட்டமை போன்றனவும் அடங்கும்.

இவர்கள் அனைவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை அடுத்தே சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறியக்கிடைத்துள்ளது.

இத்தகைய தன்னிச்சையான கைது நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு சில ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாகவும் காலை 9.52 மணியளவில் இது உணரப்பட்டுள்ள போதிலும் நான்கு, ஐந்து செக்கன் வரையும் இது நீடித்துள்ளதுடன் வீடுகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

வழமைக்கு மாறாகவே நேற்றைய சம்பவம் தென்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மேலும் மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் மிதமான நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும், நில அதிர்வு மானிகளில் இது பதிவாக்வில்லை என கூறப்படுகின்றது. (ம-3,299)

## ஜேர்மன் நாட்டு...

கும் செயற்பாடுகளை ஏப்ரல் 21ஆம் திகதிக்கு பின்னர் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் அதற்காக ஆளுநர் என்ற வகையில் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் தொடர்பில் தெரிவித்த ஆளுநர், ஜேர்மன் அர சாங்கத்தினால் வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவ முடியுமான வழிகளில் உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

அதேவேளை வடமாகாணம் எதிர்காலத்தில் முகம்கொடுக்கவுள்ள நீர்ப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஐந்து திட்டங்கள் குறித்து விளக்கமளித்த ஆளுநர் அதன் முதற்திட்டமான வடமராட்சி களப்பு திட்டம் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

மேலும் வடமாகாணத்தின் பாதுகாப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-3)

## காற்றின்...

யாக ம்ட்டக்களப்பு வரை மற்றும் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் திருகோணமலை வரையிலான கடற்பரப்பில் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கடற்றொழிலாளர்கள் அவதானத்துடன் செயற்படுவது அவசியமாகும் எனவும் காலநிலை அவதான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## பாடசாலைக்குள்...

அக்மீமன நானவில உபனந்த கனிஷ்ட பாடசாலையில் கற்று வரும் தனது மகனை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக குறித்த நபர் பாடசாலைக்கு சென்றுள்ளார்.

எனினும் இராணுவச் சிப்பாயின் அறிவுறுத்தலை மீறி பலவந்தமாக அவர் பாடசாலைக்குள் நுழைய முயற்சித்துள்ளார்.

இதன் காரணமாக இருவருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இராணுவச் சிப்பாயின் துப்பாக்கியைப் பறிக்க குறித்த நபர் முயற்சித்துள்ளார். இதனால் இந்த சூட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த சந்தேக நபர், கராப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (ம-3)

## கிளிநொச்சி இத்...

ஒன்றும் எதிர்த்திசையில் வந்த டிப்பர் ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இருவாகனங்களின் சாரதிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வவுனியாவை சேர்ந்த 32 வயதுண்டயவரும், மட்டக்களப்பைச் சேர்ந்த 40 வயதுடையவருமே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-312)

# நான்கு லட்சம் மக்கள் வறட்சியால் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சீரற்ற வானிலை காரணமாக வடக்கு மற்றும் வட மேற்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள வறட்சியால் இதுவரை சுமார் 15,000 குடும்பங்களைச் சேர்ந்த 400,000 க்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அப்பகுதியில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையினை போக்கும் முகமாக அந்த பகுதிகளுக்கு 1,000 நீர் பவுசர்கள் மற்றும் 500 நீர் தொட்டிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீரை வழங்குவதற்கு பொதுமக்களிடமும் உதவி கோரப்பட்டுள்ளது. (ம-3)

## முல்லை நந்திக்கடல் பகுதியில்

# பாரிய சத்தத்துடன் குண்டுவெடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் களப்பு பகுதியில் பாரிய சத்தத்துடன் குண்டு வெடிப்பு இடம்பெற்றதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கேப்பாப்புலவு இராணுவ படைபிரிவின் அருகாமையில் உள்ள பகுதியில் இந்த சம்பவம்நிகழ்ந்துள்ளதாக அறியக்கூடியதாக இருக்கின்றது

குறித்த குண்டு வெடிப்பு சத்தம் கேப்பாப்புலவு, முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால் உள்ளிட்டபகுதிகளில் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் இந்த குண்டுச்சத்தம் குறித்த நந்திக்கடல் களப்பு பகுதியில் தனியார் காணி ஒன்றை துப்புரவு செய்து அங்கு தீ வைத்தவேளையிலே அதில் இருந்தே குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

குறித்த இடத்தில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவம் ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளனர். இதன்போது யாருக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லை என அறியமுடிகிறது. (ம-281)

## மட்டக்களப்பில் பதற்றம் இரா...

ருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து, பொலிஸ் அதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கியை ஒருவர் பறித்துச் சென்றார். இதையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவின் கீழுள்ள புதுநகர், திமிலைதீவு ஆலயத்துக்கு அருகில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் வீதி போக்குவரத்து பொலிஸார் இருவர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, இருவர் தலைகவசமின்றி வவுணதீவு பிரதேசத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது பொலிஸார் அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்டுள்ளனர்.

எனினும், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர்கள் மோட்டார் சைக்கிளை திருப்ப முயன்ற போது வீதியின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவரும் காயமடைந்தனர். பின்னர் அங்கு ஒன்று திரண்ட பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்ட போது பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்த கைத்துப்பாக்கி ஒன்றை இனம் தெரியாத ஒருவர் அபகரித்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து விபத்தில் காயமடைந்த இருவரும் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், இராணுவத்தி னர் மற்றும் விசேட அதிரடிப்படை யினர் விசாரணைகளை மேற்கொண்டு வவுணதீவுகளப்பு பகுதியில் இருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

இதேவேளை புதூர் மற்றும் வவுணதீவு பகுதிகளில் மேலதிக மாக இராணுவத்தினர் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அந்த பகுதிகளில் பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் மற்றும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-3)

## காங்கேசன்துறை...

ணத்தில் தொழில் வாய்ப்புக்களை அள்ளி வழங்கிய 4 கைத்தொழிற்சாலைகள் செயலிழந்து காணப்படுகிறது. இவற்றை ஏன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், வட மாகாணத்தில் அதிகளவிலான தொழில்வாய்பாளர்களை உருவாக்கிய சீமெந்து ஆலைய்யை மீள இயக்க வைப்பதற்கு நான் தயாரகவே உள்ளேன்.

மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறும் தமிழ் தேசியக் கூட்டமைப் பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே இதற்குத்தடையாக உள்ளார்.

அவரிடம் கேளுங்கள் சம்மதித்தால் ஒத்துழைக்கத் தயாராகவே உள்ளேன் என ஆளுநர் பதிலளித்தார். (ம-3,10)

## போதை பொருள்...

அவரது மனைவி கைது செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து இடம்பெற்ற விசாரணைகளில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து கொழும்பு உயர் நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதித்தது.

தொடர்ந்தும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு மனுவை அவர்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இருப்பினும், இந்த சந்தேக நபர்களுக்கு தூக்கு தண்டனை விதித்த உயர் நீதிமன்றத்தின் முடிவை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. (ம-3)

## வலி வடக்கில்...

அப்பிரதேச மக்களுக்கு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதுடன், இப்பிர தேசத்திற்குள் தமது காணி உள்ளவர்கள் தெல்லிப்பளை பிரதேச செயலாளரை தொடர்பு கொள்வதனூடாக தமது காணிகளை அடையாளப்படுத்தி அளவீடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (ம-3)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
எமரல்ட் ஐல் தரும்
License No. 2268
சவுதி அரேபிய வேலைவாய்ப்பு
JCB Operator, JCB Mechanic, Grader Operator, Bulldozer Operator, Backhoe Loader Operator, Trailer Driver, Hydraulic Mechanic, Light Vehicle Mechanic, Base course Roller Operator, Auto Electrician
(C-6869)
சம்பளம்
ரூ.67,200 - ரூ.144,000
தங்குமிடம், மருத்துவம், காப்புறுதி, விமானச்சீட்டுக்கள் இலவசம்
குறிப்பு: பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்
0777 324 004
077 00 38 215
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
email jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk



கொவிசெத
திகதி 2019.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 2168
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 31 57 73
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/07/04
சீட்டிழுப்பு இலக்கம் 3952
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 1 1 3 9 8
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1550
திகதி 2019/07/04
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 08 20 55 58
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/07/04
சீட்டிழுப்பு இலக்கம் 567
லக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 05 24 26 32
தேசிய லொத்தர் சபை

## வேலையாட்கள் தேவை

1. வேலை தெரிந்த சமையல் உதவியாளர்
2. உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)
3. சுத்திகரிப்பாளர் (கிளீனர்)

கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்
(ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்ப்பாணம்)
தொடர்பு : 077 740 4883

(9465)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள் 3 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528

(C-6868)

## மைதான மாற்றம் தொடர்பாக

இன்று மாலை 3.00 மணியளவில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற விருந்த இ.போ.சபை வட பிராந்திய விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது வருட நிறைவு "பொன் விழா" சுற்றுப்போட்டிகளின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் தவிர்க்க முடியாத காரணத்தால் அருகிலுள்ள குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டு மைதானத் திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர் :-
இலங்கை போக்குவரத்து சபை
வட பிராந்திய விளையாட்டுக் கழகம்

(9466)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் அம்மன் வீதியில் ஆடிய பாதம் வீதியில் இருந்து குறுகிய தூரத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 076 100 4549

(9469)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து- 700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELs

(C-6817)

## கணனி திருத்தம்

IPhone, IPad, ICloud Unlock

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும்

தொடர்புகளுக்கு :
ALM Computer System - 077 243 8537

(9464)


## காற்றின்...

வடமேல் மாகாணம் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும மணித்தியாலத்திற்கு 40 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வழி 23


## Physics Classes

R.Raakulan

மாலை நேர துரித மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் 05.07.2019

2021 A/L :- அளவீடுகளும், பொறியியலும்
2020 A/L :- பொறியியலும், அலைவுகளும் அதிர்வுகளும்

அதிகளவான பயிற்சிகளும் பரீட்சைகளும்.

The Science Corner
Clock Tower Lane, Jaffna.
தொடர்புகளுக்கு : 076 545 6118

(9471)

## விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

### மாபெரும் விசேட செயலமர்வு

2019 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கானது.....

| காலம் | நேரம் | பாடங்கள் |
|---|---|---|
| 12,13,14 | 8.30 - 2.30 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 15,16 | 8.30 - 2.30 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | 8.30 - 2.30 | ICT, விஞ்ஞானம், கணிதம் (7), புவியியல், ஊடகக்கல்வி |

புதிய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திலும்,
பழைய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பழைய பாடத்திட்டத்திலும் தனித்தனியான அமர்வுகள்

- தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
- அமர்வுகள் ஒவ்வொன்றும் கடந்த நான்கு வருடமாக தேசிய நிலையிலும், மாவட்டநிலையிலும் பல சாதனை மாணவர்களை உருவாக்கிய விஸ்டத்தின் அதே விசேட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.
- கையேடுகளைச் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளைப் மேற்கொள்ளவும்.
- வெற்றி பெறும் மாணவர்களின் தேர்வு விஸ்டம் தொழினுட்பக் கல்லூரியே.

முற்பதிவுகளுக்கு:- ☎021 221 7860 / ✆077 248 7774

☆☆☆☆☆☆ தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு ☆☆☆☆☆☆

(C-6846)

## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின்



வர்த்தக கையியக்க மெசின்



வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

தொடர்புகளுக்கு : 076 796 6000. 077 968 1118 (இலங்கை)
இல் 4164336006
இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ. கனடா)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca

(8716)

## நெல்லியடியில் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

யூலை 27, 28ஆம் திகதிகளில் நடக்கவுள்ள புள்ளிவிபர அலுவலர், நீதிமன்ற பதிவாளர் தேர்வு விசேட வகுப்புகள்

வடக்குமாகாண M.A SLAS, SLEAS வகுப்புக்கள்

உயர் கல்லூரி
நெல்லியடி.
தொடர்பு :
077 435 0958

(C-6865)

## IITA

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் - சுவிற்சர்லாந்து

### தமிழ்க்கலைத் தேர்வு – 2019
### தேர்வு நடுவர்கள் தேவை

(நடனம் - பரதம், இசை (வாய்ப்பாட்டு, வயலின், வீணை), மிருதங்கம்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தால் ஐரோப்பிய நாடுகளில் (சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், டென்மார்க், இத்தாலி) ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் நடாத்தப்பட்டு வரும் தமிழ்க்கலைத் தேர்விற்கு தேர்வு நடுவர்களாக கடமையாற்ற விரும்புவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை 31.07.2019 புதன்கிழமைக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அல்லது மின்னஞ்சலிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வித் தகைமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் துறைசார் பட்டப்படிப்பினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
2. துறைசார் கற்பித்தலில் பத்து (10) வருடத்திற்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி
International Institute of Tamil Arts
Postfach 6711
8050 Zurich
Switzerland.
மின்னஞ்சல்: iita@hotmail.ch

நாகராஜா விஜயகுமார்
தேர்வுப்பொறுப்பாளர்
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் - சுவிற்சர்லாந்து
0041 440 20 58, 0041 77 922 03 14

(9459)

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L 2019

பழைய, புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான
### விஷேட செயலமர்வு

ஆரம்பம் காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 12,13,14 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 15,16 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | I.C.T விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, சித்திரம், இலகுகணிதம் |

குறிப்பு

- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகுரீதியாக தெளிவுபடுத்தப்படும்.
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி.
- வினாத்தாள்களும் அதற்குரிய விடைகளும், விளக்கங்களும் வழங்கப்படும்.
- முற்பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே கையேடுகள் வழங்கப்படும்.

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்
அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்புகளுக்கு : 077 01 75 346

(C-6861)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-I


## மேல்மாகாணம்

❖ சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக. முதலில் தரப்பட்ட உருவுக்கு மிகவும் பொருத்தமான உருவை தெரிவு செய்க.

1.



2.



3. 38+ 6+10

1) 38+ 3×5 2)38+ 4×4 3)38+ 2×9

❖ 4ஆம் 5 ஆம் வினாக்களுக்கு தடித்த எழுத்தில் உள்ள சொற்றொடருக்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.

04. கமலாவின் பாடலைக் கேட்ட சபையினர் முகம் மலர்ந்தனர்.
1) மிக மகிழ்ச்சியடைந்தனர்
2)உற்சாகமடைந்தனர்
3)புத்தூக்கமடைந்தனர்

05. விமலன் ஆங்கிலப் பாடத்தில் நுனிப்புல் மேய்ந்ததால் பரீட்சையில் சித்தியடையவில்லை.
1)கடும் முயற்சி 2) கற்காமை 3) மேலெழுந்த வாரியாக


❖ 06 ஆம், 7 ஆம் வினாவிற்கு கவிதையினை வாசித்து கோடிடுக.

சிறகடிக்கும் பறவையின் கீத ஒலி கேட்கும்
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்

06. காலையில் வீசும் காற்று எதனை செய்வதாக கவிதை கூறுகிறது.
1) பறவைகளின் கீத ஒலியை கேட்கச் செய்யும் என்பதை
2) உடலுக்கு குளிர்ச்சி தரும் என்பதை
3) மலர்கள் மணம் பரப்பும் என்பதை

07. காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடாத ஒரு விடயம்
1) குளிர்ச்சியான தென்றல் காற்று வீசுதல்
2) நறுமணமுள்ள மலர்கள் மலரும்
3)ஒளி மெதுவாகப் பரவுதல்

❖ பின்வரும் உருக்களைக் கொண்டு சரியான விடைகளை தெரிவு செய்க



A B C



D E

08. கொடியில் காய்க்கும் பழம்
1)B 2)D 3)E

09. பற்றையில் மட்டும் காய்க்கும் பழங்கள்
1)A,B 2)A,D 3)C,D

❖ தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொல்லுக்கு பொருந்தக் கூடிய சொல்லை தெரிவு செய்க.

10. மற்றவர்கள் மீது பொல்லாங்கு சொல்வதை நாம் தவிர்த்தல் வேண்டும்.
1) குற்றம் 2)தீமை 3) பெருமை

11. கீழ்ப்படிவு உள்ள பிள்ளைகள் பெரியோர் சொல் கேட்பர்.
1) அறிவுரை 2)பணிவு 3)இரக்கம்

❖ கடை ஒன்றின் பொருட்களின் விலைகள் பின்வருமாறு குறியீடுகளினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | F | G | H | I | J | K | L | M | N |

12. மின் கேத்தல் ஒன்றின் விலை ரூ 745 ஆகும் இங்கு விலை குறியீட்டினால் குறிப்பிடப்பட்டிருக்கும் முறை.
1)LIH 2)ILJ 3)LIJ

13. ஐஸ்கீரிம் ஒரு லீற்றரின் விலை ரூ. HKE/=என குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் குறிப்படப்படும் விலை
1) ரூ. 365/= 2)ரூ. 360/= 3) ரூ.630/=

14. சரியான கருத்தை தரும் வாக்கியத்தை தெரிவு செய்க.
1) விரைந்தோடி மான்கூட்டம் சிங்கத்தை கண்டவுடன் மறைந்தன
2) சிங்கத்தைக் கண்டவுடன் மான் கூட்டம் விரைந்தோடி மறைந்தது
3) மான் கூட்டம் சிங்கத்தைக் கண்டவுடன் மறைந்தன விரைந்தோடி

15. 1)முயற்சி செய்வோரின் எந்தக் காரியமும் வெற்றி பெறும்
2)எந்த முயற்சி செய்வோரின் காரியமும் வெற்றி பெறும்
3)வெற்றி பெறும் எந்த முயற்சி செய்வோரின் காரியமும்


16. சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையின் கீழ் கோடிடுக.
1.)உலகம், நாடு, கிராமம், நகரம்
2)நகரம், உலகம், கிராமம், நாடு
3)உலகம், நாடு, நகரம், கிராமம்

17. 1) சென்ரி மீற்றர், கிலோ மீற்றர், மில்லி மீற்றர், மீற்றர்
2) கிலோ மீற்றர், மீற்றர், சென்ரி மீற்றர், மில்லி மீற்றர்
3) மில்லி மீற்றர், சென்ரி மீற்றர், மீற்றர், கிலோ மீற்றர்

18, அ) விதைகளை தூவினார்
ஆ) அறுவடை செய்தார்.
இ)பாத்திகளை அமைத்தல்
ஈ) நாற்றுக்களை நட்டார்
உ) நிலத்தை பண்படுத்தினார்

1) உ அ இ ஆ ஈ 2)இ உ ஈ அ ஆ 3) உ இ அ ஈ ஆ


19. தரப்பட்டுள்ள உருவை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.




1. 2 3.

❖ பின்வரும் உருக்களுள் வித்தியாசமான உருவை தெரிவு செய்க.







❖ முதலில் தரப்பட்ட உருவை மேலிருந்து அவதானிக்கும் போது தோன்றும் வடிவம்.



1. 2. 3.

23.



1. 2. 3.

❖

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-I மேல்மாகாணம்


24. கவிதா சந்தியாவைவிட உயரமானவர். சந்தியா சிந்தியாவை விட உயரமானவர்.
1) மிகவும் உயரமானவர் கவிதா
2)மிகவும் கட்டையானவர் சந்தியா
3)கவிதா சிந்தியாவை விடக் கட்டையானவர்

25. காலை உணவை உண்பதற்காக சிற்றுண்டிச் சாலைக்கு சென்ற நண்பர்கள் ஏழு பேர் கிழங்கு கறியுடன் முட்டை 7 உம் கேட்டனர். ஒரு முட்டை அவிக்க 5 நிமிடங்கள் எடுக்கின்றது. எனின் ஏழு முட்டைகள் அவிக்க எத்தனை நிமிடங்கள் எடுக்கும்.
1) 5 நிமிடங்கள் 2) 7 நிமிடங்கள் 3) 35 நிமிடங்கள்


26. நண்பர்கள் ஐவர் மதில் ஒன்றில் வரிசையாக அமர்ந்துள்ளார்கள். வர்சான் கவினின் வலது கைப்பக்கம் அமைந்துள்ளார். நிஸான் வர்சானின் வலது கை பக்கத்திலும் அனுசனின் இடது பக்கத்திலும் அமர்ந்துள்ளான்.குமார் அனுசனின் வலது பக்கம் அமர்ந்துள்ளான் சரி மத்தியில் (நடுவில்) அமர்ந்துள்ளவர் யார்?
1) வர்சான் 2)நிஸான் 3) அனுசன்

27. இன்று வெள்ளிக்கிழமையாகும். நாளை மறுநாள் 20 ஆம் திகதியாகும். சுகந்தியின் பிறந்த நாள் நேற்றைக்கு முன்தினமாகும். சுகந்தியின் பிறந்த தினமும் நாளும் .
1) 16 வியாழன் 2) 17 வியாழன் 3)16 புதன்

28. வட்ட வடிவமான கடதாசி ஒன்று எட்டாக மடிக்கப்பட்டு சிறிய பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது. மடிக்கப்பட்ட படத்தின் வடிவமாக அமையக் கூடியது.



29. சதுர வடிவ கடதாசி ஒன்று பின்வரும் அமைப்பில் மடிக்கப்பட்டு நிறந்தீட்டப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்டது. சரியான உருவை தெரிவு செய்க.



❖ பின்வரும் எழுத்துக்களுள் தளவாடியில் பார்க்கும் போது அதே விதமாக தோன்றும் எழுத்துக்களைக் கொண்ட விடையை தெரிவு செய்க.

30. AYXOC
1) AYC 2) XAY 3) AXO

31. BMETV
1) BTV 2) MTV 3) BTV

32. என்னுடைய வயது 13 ஆகும். தங்கை என்னுடைய வயதிலும் 5 வருடங்கள் குறைவானவர் .தங்கையை விட என்னுடைய அண்ணன் 9 வருடங்கள் மூத்தவர். எனின் அண்ணனின் வயது யாது?
1) 17 2) 21 3) 25

33. தீக்குச்சியால் இலக்கங்கள் உருவாக்கிய ஒரு மாணவனுக்கு இருபத்து ஏழு ஐ உருவாக்க எட்டுத் தீக்குச்சிகள் தேவைப்பட்டது. இருபத்தொன்பதை உருவாக்க ஏழு தீக்குச்சிகளும் தேவைப்பட்டது. முப்பத்து ஆறை உருவாக்க எத்தனை தீக்குச்சிகள் தேவை?
1)8 2)9 3)10

34. பண்ணை ஒன்றில் உள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 30 ஆகும். அங்குள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?
1) 7 2) 8 3) 9

35. ஒரு விருந்துக்காக கேக்குகள் கொண்டுவரப்பட்டது.கொண்டுவரப்பட்ட கேக்குகளில் ஒன்று 20 துண்டுகளாக வெட்டப்பட்டது.மொத்தமாக கிடைத்த துண்டுகளின் எண்ணிக்கை 160 ஆகும் . அதே ஒரு கேக்கை 25 துண்டுகள் வரும் விதமாக வெட்டினால் எத்தனை துண்டுகள் கிடைக்கும்.
1.200 துண்டுகள் 2)180 துண்டுகள் 3) 220 துண்டுகள்

36.ஒரு பெட்டியில் 100 குளிர்பான போத்தல்கள் உள்ளன.அதன் இரண்டு மடங்குக்கு 70 குறைவாக இன்னுமொரு பெட்டியில் குளிர்பான போத்தல்கள் உள்ளன. இரண்டு பெட்டிகளிலும் உள்ள குளிர்பான போத்தல்கள் எத்தனை?
1)170 2)200 3)230

37. சதுர வடிவமான பூப்பாத்தி ஒன்றைச் சுற்றி சம இடைவெளியில் தூண்கள் நடுவதற்காக குழிகள் தோண்டப்பட்டன. ஒரு பக்கத்தில் காணப்பட்ட குழிகளின் எண்ணிக்கை 20 எனின் பூப்பாத்தியை சுற்றி நட எத்தனை தூண்கள் தேவை.
1)40 2) 64 3)76

38. குறித்த ஒரு மாதத்தின் 3 ஆம் திகதி கண்காட்சியொன்று ஆரம்பமாகி 6 நாட்கள் நடைபெற்றதெனின் அது முடிவடைந்த திகதி யாது?
1)8 ஆம் திகதி 2)7 ஆம் திகதி 3)9 ஆம் திகதி

❖ பின்வரும் தகவல்களைக் கொண்டு 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

இரண்டு பேனாக்களின் விலை ரூ.40 ஆகும்.
ஒருநாட்காட்டியின் விலை ஐந்து பேனாக்களின் விலையிலும் ரூ.15.00 அதிகமாகும்.
ஒரு தினக்குறிப்பின் விலை ஒரு பேனாவினதும் ஒரு நாட்காட்டியினதும் மொத்த விலைக்கு சமனெனின்

39. ஒரு நாட்காட்டியின் விலை என்ன?
1. ரூபாய் 100.00 2) ரூபாய் 115.00 3) ரூபாய் 95.00

40. ஒரு தினக்குறிப்பின் விலை யாது.?
1)ரூபாய் 120.00 2)ரூபாய் 155.00 3) ரூபாய் 135.00

## 03.07.2019 அன்று வெளியான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

### பகுதி-II விடைகள்

01. 1)பரிதி 2) எண்ணிய 3)பாவம்
4)திண்ணிய நெஞ்சம் 5)பரிதி முன் பனியே போல
6)....... 7)நல்ல அறிவு
8)சுப்பிரமணிய பாரதியார்.
02. 1) உழைப்பும் 2)வெந்நீரில்
03. 1)இலங்கை மின்சார சபை
2)வெளிநோயாளர் பிரிவு
04. 1) பாடுவோம் 2)பாடினீர்கள்
3)பாடுவார்கள் 4)பாடும்
05. 1) மனம் மகிழ்தல்
2)எதிர்நோக்குதல்
06. 1)ஊதாரி 2)அநாதை 3)நாத்திகன்
07. 1)நான் வெளியே போகலாமா?
2) என்னால் பறக்க முடியும்
08. I will come tomorrow
09. 1) அம்மா பத் உயனவா
2)ஒயாகே கம கொஹேத
10. 1)தேநீர் குடியுங்கள்
11. 1)சுவனி
2)10
3)உயர்க
12. ...........
13. இருபதாயிரத்து எழுபது
14. 1)3
2)5
15. 4482
16. 25
17. 108 சென்றிமீற்றர்
18. 625 ml
19. 248
20. பி.ப 2.10
21. 4 வரிசை
22. 5/8
23. ரூ.192.00
24. 1 kg 500 g
25. ரூ.120.00
26. ரூ.444.00
27. 10 $cm^2$

| | | | |
|---|---|---|---|
| 28. | 2 | 43. | 3 |
| 29. | 3 | 44. | 3 |
| 30. | 4 | 45. | 3 |
| 31. | 3 | 46. | 2 |
| 32. | 2 | 47. | 1 |
| 33. | 3 | 48. | 1 |
| 34. | 2 | 49. | — |
| 35. | 2 | 50. | 2 |
| 36. | 1 | 51. | 4 |
| 37. | 2 | 52. | 1 |
| 38. | 4 | 53. | 4 |
| 39. | 3 | 54. | 2 |
| 40. | 4 | 55. | 1 |
| 41. | 2 | 56. | 3 |
| 42. | 3 | 57. | 3 |